Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5 00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஐப்பசி 11 | (27 - 10 - 1992) | செவ்வாய்க்கிழமை | ஓசை 252

## அகதிகள் நிலைகுறித்து ஐ. நா. ஆராய்கின்றது

இலங்கையில் நடைபெற்றுவரும இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தமது குடியிருப்புக்களில் இருந்து இடம்பெயாந்த லட்சக் கணக்கான மக்களின் நிலைகுறித்து ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலகம் ஆராய்ந்து வருகிறது. இலங்கையில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இதுவரை ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமது சொந்த குடியிருப்புக்களில் இருந்து இடம்பெயர்ந்து வேறுபகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் இவர்கள் தமது தொழில்களையும் இழந்து வாழ்வுக்கு வருமானமற்ற நிலையில் வாழ்கின்றனர். இவர்களுக்கு அரசு (4 ஆம் பக்கம் பார்க்க)

# உயிலங்குளத்தில் துணிகர தாக்கு

# 10 படையினர் பலி: பலர் காயம்

## பத்து காவலரண்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டம் உயிலங்குளத்திற்கும் - கரம்பைக்குளத்திற்கும் இடையிலிருந்த தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை திடீர்த் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். சுமார் 30 நிமிடங்கள்வரை நீடித்த இம்மோதலில், பத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து பத்து தொடர் காவலரண்களும், ஒரு வீடும் புலிகளிடம் வீழ்ச்சிகண்டது.

மேலும், இத்தாக்குதலில் இராணுவத்தினரிடம் இருந்து பல ஆயுதங்களும், ராணுவப் பொருள்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இம்மோதலில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று அதிகாலை 2.15 மணியளவில் விடுதலைப்புலிகளால்இத்துணிகரத்தாக்குதல் தொடுக்கப்பட்டது. சுமார் 30 நிமிடங்கள் நீடித்த பலத்த சண்டையின் பின்னர் பத்து காவலரண்களும் ஒரு வீடும் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இதேவேளை, இத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுக் கொண்டிருக்கையில் அடம்பன், உயிலங்குளம் ஆகிய இரு முகாம்களிலும்இருந்து 'பவல்' கவசவாகனம் சகிதம் வெளியேறிவந்தஇராணுவத்தினரை விடுதலைப் புலிகளின் வேறு அணியினர் வழி மறித்துத் தாக்குதலை மேற் கொண்டனர்.

புலிகளின் இவ் எதிர்த்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் பின் வாங்கிச் சென்றனர். முகாம்களில் இருந்து வெளியேறிய இராணுவத்தினருக்கும் சேதம் ஏற்பட்டதாயினும், அது குறித்து சரியான விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மன்னார் மாவட்டம் உயிலங்குளம் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீதான தாக்குதலில் ஒரு ஆர். பி ஜி ஒரு இலகுஇயந்திர துப்பாக்கி உட்பட பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு;

★ ஆர்.பி.ஜி — 01
★ ஆர்.பி.ஜி எறிகணைகள் — 03
★ புறப்லர் — 03
★ ஏ கே எல்.எம்.ஜி — 01
★ புகைக்குண்டுகள் — 02
★ நேட்டோ ரவைகள் — 81
★ நடுத்தரகாஸ் ரவைகள் — 07
★ தொலைத்தொடர்பு பற்றி — 02
★ தலைக்கவசங்கள் — 02
★ இராணுவ சப்பாத்துகள்(சோடி) — 27
★ சிவில் சப்பாத்து (சோடி) — 20
★ ஏ. கே. கோல்சர் — 08
★ இராணுவ உருமறைப்பு சீருடை (சோடி) — 30

## 3வேங்கைகள் வீரச்சாவு



## "மெரிநாள்" வந்தது

(யாழ்ப்பாணம்)

செயர்ஸ் ஸ்தாபனத்திற்கு 500 மெற்றிக்தொன் உரம் மற்றும் தனியாருக்கான மண்ணெண்ணெய் ஆகிய பொருள்களை கொழும்பிலிருந்து ஏற்றிக் கொண்டு "மெரிநாள்" என்ற கப்பல் காங்கேசன் துறையை வந்தடைந்துள்ளது.

நேற்று வந்தடைந்த மேற்படி கப்பல் பொருள்களை இறக்க பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரும் என தெரிய வருகின்றது. (பா)

## வடமராட்சியில் சுப்பர் சொனிக்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழககு கடற்பகுதியில் நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா கடற்படைக் கப்பல்களின் நடமாட்டம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 'விடுதலைப்புலிகளிடம் நீர்மூழ்கிக் கப்பல்'

### - ஐலன்ட் பத்திரிகை புரளி

(கொழும்பு)

நீருக்கடியில் சென்று தற்கொலைத் தாக்குதல் செய்யக்கூடிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றைப் புலிகள் கட்டியிருப்பதாக ஐலன்ட் ஞாயிறு இதழ் முன்பக்கத் தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது. இந்தப் படகின் வெள்ளோட்டம் முடிந்துவிட்டதாகவும் அச்செய்தி கூறுகின்றது

பாக்குநீரிணையில்புலிகளின் நடமாட்டத்தைக்கண்காணிக்கும் சிறிலங்கா கடற்படைப் படகுகளின் ராடர் கருவி பொருத்தப்பட்ட தாய்ப் படகை மூழ்கடிப்பதற்கே இந்தப் படகு கட்டப்பட்டுள்ளது

தொண்டமனாற்றுக்கும் பருத்தித்துறைக்கும் இடைப்பட்ட கடல்பகுதியில் புலிகள் இந்த மினி - நீர்மூழ்கிக் கப்பலை ஓடிப் பரிசீலித்துப் பார்த்ததாக சிறிலங்கா கடற்படைப் புலனாய்வுத் தகவல் பகுதி சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ராடர் கருவி பொருத்தப்பட்ட தாய்க்கப்பலை வெடி வைத்து மூழ்கடிப்பதற்கே புலிகள் முயற்சிப்பதாகவும், இந்த நீர்மூழ்கிக் கப்பலை ஒரு ஓட்டியே செலுத்துகிறாரென்றும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மனம்தளர்வுற்ற இராணுவத்தால் யுத்தம் புரிய முடியவில்லை

### - சிங்கள விமர்சகர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தின் இப்போதைய பலம் புலிகளுடன் போராட போதுமானது என அரசாங்கம் கருதுகின்றபோதும், இராணுவம் தற்போது அடைந்துள்ள தளர்ச்சியானது இதனைச் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளதாக ஐலன்ட் ஞாயிறு இதழ் அரசியல் மற்றும் இராணுவ விமர்சகர் றோகன் குணசேகரா தெரிவித்துள்ளார்.

அமைப்புகளாகும். இராணுவத்தில் மொத்தம் 37 படைப் பிரிவுகள் உள்ளன இதில் 25 நிரந்தரப் படைப்பிரிவுகளும், 12 தொண்டர் படைப் பிரிவுகளும் அடங்கும் அப்படியிருந்தும் யுத்த முனைகளில் எல்லாப்பகுதிகளிலும் சமகாலத்தில் இராணுவம் போரிட முடியாத நிலையில் உள்ளது கலவெலபொலிஸ் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று அணிவகுப்புச் செய்து வெளி

கான காரணமாகும் என்றும்-

வடக்கிலும் கிழக்கிலும் புலிகள் இராணுவ முன்னணிப் பாதுகாப்புவேலிகளைஉடைத்துக் கொண்டு வெற்றிகரமாக ஊடுருவ முடிந்தது முன்னணிப் பாதுகாப்பு நிலைகள் பலவீனமாக இருந்ததைப் பயன் படுத்திக் கட்டைக்காட்டில் புலிகள் ஊடுருவித் தாக்கிப் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளார்கள். வடக்கிலும் கிழக்கிலும் புலிக

நேற்று அதிகாலை 2.15 மணியளவில் விடுதலைப்புலிக ளால்இத்துணிகரத்தாக்குதல் தொடுக்கப்பட்டது. சுமார் 30 நிமிடங்கள் நீடித்த பலத்த சண்டையின் பின்னர் பத்து காவலரண்களும் ஒரு வீடும் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இதேவேளை, இத்தாக்கு தல் சம்பவம் இடம் பெற்றுக் கொண்டிருக்கையில் அடம் பன், உயிலங்குளம் ஆகிய இரு முகாம்களிலும்இருந்து 'பவல்' கவசவாகனம் சகிதம் வெளி யேறிவந்தஇராணுவத்தினரை விடுதலைப் புலிகளின் வேறு அணியினர் வழி மறித்துத் தாக்குதலை மேற் கொண்ட னர்.

புலிகளின் இவ் எதிர்த்தாக் குதலுக்கு ஈடுகொடுக்க முடி யாத இராணுவத்தினர் பின் வாங்கிச் சென்றனர். முகாம் களில் இருந்து வெளியேறிய இராணுவத்தினருக்கும் சேதம் ஏற்பட்டதாயினும், அது குறித்து சரியான விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

# கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மன்னார் மாவட்டம் உயிலங்குளம் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ காவல ரண்கள் மீதான தாக்குதலில் ஒரு ஆர்.பி ஜி ஒரு இலகுஇயந்திர துப்பாக்கி உட்பட பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற் றப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு;

| | |
|---|---|
| ★ ஆர்.பி.ஜி | — 01 |
| ★ ஆர்.பி.ஜி எறிகணைகள் | — 03 |
| ★ புறப்லர் | — 03 |
| ★ ஏ கே எல்.எம்.ஜி | — 01 |
| ★ ஏ.கே.எல்.எம்.ஜி ரம் மகசின் | — 04 |
| ★ தொடர்ரவைகள் | — 450 |
| ★ ரி-81-1ரக துப்பாக்கிகள் | — 08 |
| ★ அதற்குரிய ரவைக்கூடுகள் | — 51 |
| ★ ரி-56 ரவைக்கூடுகள் | — 06 |
| ★ ஜி-3 ரவைக்கூடுகள் | — 01 |
| ★ நடுத்தர ரவைகள் | — 8485 |
| ★ ஜே.ஆர். கைக்குண்டுகள் | — 05 |
| ★ புகைக்குண்டுகள் | — 02 |
| ★ நேட்டோ ரவைகள் | — 81 |
| ★ நடுத்தரகாஸ் ரவைகள் | — 07 |
| ★ தொலைத்தொடர்பு பற்றி | — 02 |
| ★ தலைக்கவசங்கள் | — 02 |
| ★ இராணுவ சப்பாத்துகள்(சோடி) | — 27 |
| ★ சிவில் சப்பாத்து (சோடி) | — 20 |
| ★ ஏ. கே. கோல்சர் | — 08 |
| ★ இராணுவ உருமறைப்பு சீருடை (சோடி) | — 30 |
| ★ தொப்பிகள் | — 14 |
| ★ தபால் பைகள் | — 09 |
| ★ தண்ணீர்க்கான் | — 13 |
| ★ தண்ணீர்க்கான் கோல்சர் | — 12 |
| ★ சாப்பாட்டு பெட்டி | — 11 |
| ★ இராணுவ பைகள் | — 08 |
| ★ சாப்பாட்டுப் பெட்டிகள் | — 18 |
| ★ கமரா | — 01 |

# பொருளாதார நெருக்கடியால் இராணுவ விஸ்தரிப்பு தடங்கல்

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் எதிர் கொள்ளும் பாரிய பொருளா தார நெருக்கடியின் காரண மாக இராணுவத்திற்கு புதி தாக ஆட்களைச் சேர்ப்பதி லும், ஆயுத தளபாடக் கொள் வனவிலும் பெரும் நெருக்கடி நிலை உருவாகியிருப்பதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் ஒரு கட்டமாக முன் னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரெட்னாவின் இராணுவத்தின் தொகையை ஒரு லட்சமாக உயர்த்தும் திட்டம் அரசால் கைவிடப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. இப்போதைக்கு இராணுவத்தின் பலத்தை அரசு அதிகரிப்பதில்லை என வும் முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது, இதற்கு படையினருக்குச் சம்பளம் வழங்கமுடியாதமையே காரணம் எனவும் அரசால் தெரி விக்கப்பட்டுள்ளதாம்

அத்தோடு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்குமுன் கூட்டியே அரசாங்கம் பணம் வழங்காமையால் ஆயுதக் கையிருப்பு ஆபத்தான நிலைக்குக் குறைந்து விடுகின் றது என்றும், ஆயுதங்களை யும் உபகரணங்களையும் காலம் தாழ்த்தியே அரசாங் கம் கொள்வனவு செய்வதாக வும்தெரியவருவதாக அச்செய் திகள்மேலும் தெரிவிக்கின்றன

# இராணுவ அதிகார பீடமாற்றம் புலிகளைப் பாதிக்கவில்லை

## இராணுவ விமர்சகர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தாம் விரும்பியபோது, விரும்பிய இடத்தில் தாக்குதல் நடத் தும் ஆற்றலில் படைகளின் தலைமைப் பீடத்தில் ஏற்ப டுத்தப்பட்ட மாற்றங்கள் எவ் விதமான அழுத்தங்களையும் ஏற்படுத்தவில்லை என ஐலன்ட் கருத்துத் தெரிவித் துள்ளது.

படைகளின் தலைமையிலும் கட்டுப்பாட்டு அமைப்பிலும் ஒக்டோபர் 9ஆம் திகதி வெளிப்படையான பல மாற் றங்கள் செய்யப்பட்டபோதி லும், புலிகளின் யுத்த தந்தி ரம் அப்போதிருந்தது போல் இப்போதும் உள்ளது என ஐலன்ட் பத்தி எழுத்தா ளர் சுமித்திரா பெர்னான் டோ எழுதியுள்ளார்.

அவர் மேலும், யுத்தம் வெற்றி தோல்வியை தீர்மா னிக்கும் கட்டத்தை எட்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று சிங்கள மீனவர் இன்று புலிகளால் விடுதலை

தமிழீழ விடுதலைப் புலிக ளால் தடுத்துவைக்கப்பட்டி ருக்கும் மூன்று சிங்கள மீன வர்கள் விடுவிக்கப்படவுள்ள னர்,

இவர்கள் இன்று நண்பகல் 12-00 மணியளவில் கடற்புலி கள் அரசியற் பொறுப்பாளர் திரு. மாறன் அவர்களால் சர் வதேச செஞ்சிலுவை சங்க பிரதிநிதிகளிடம் ஒப்படைக் கப்படுவர்.

அமிர்தாசன் சந்திரதாச (வயது-28), திருமலை, சமித பால பிறின்ஸ் பியந்த (வயது 24), திருமலை, விஜய்சுமித் (வயது 18), திருமலை ஆகிய மூவருமே மனிதாபிமான அடிப்படையில் இன்று விடுவிக் கப்பட உள்ளவர்களாவர்.


# 3வேங்கைகள் வீரச்சாவு



லெப். நிரோஜ்



லெப். சசிகுமார்



லெப். இறையனார்

மன்னார் மாவட்டம் உயி லங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை விடுதலைப் புலி கள் மேற்கொண்ட இராணுவ காவலரண்கள் மீதான தாக் குதலில் மூன்று விடுதலைப் புலிப் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த லெப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மனம்தளர்வுற்ற இராணுவத்தால் யுத்தம் புரிய முடியவில்லை

## - சிங்கள விமர்சகர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தின் இப்போ தைய பலம் புலிகளுடன் போராட போதுமானது என அரசாங்கம் கருதுகின்ற போதும், இராணுவம் தற் போது அடைந்துள்ள தளர்ச் சியானது இதனைச் செய்ய முடியாத நிலையை ஏற்படுத் தியுள்ளதாக ஐலன்ட் ஞாயிறு இதழ் அரசியல் மற்றும் இரா ணுவ விமர்சகர் றோகன் குண சேகரா தெரிவித்துள்ளார்.

7-வது லயிற் இன்பென்றறி (காலாட்படை), கெமுனு வாச்சிஸ் 7வது படைப்பிரிவு, 8-வதுசிங்கா, 8-வதுகஜபாகு, 7-வது விஜயபாகு இன்பென் றறி ஆகியன அண்மைக்கால அமைப்புகளாகும். இராணு வத்தில் மொத்தம் 37 படைப் பிரிவுகள் உள்ளன இதில் 25 நிரந்தரப் படைப்பிரிவுக ளும், 12 தொண்டர் படைப் பிரிவுகளும் அடங்கும் அப்படி யிருந்தும் யுத்த முனைகளில் எல்லாப்பகுதிகளிலும் சம காலத்தில் இராணுவம் போ ரிட முடியாத நிலையில் உள் ளது கலவெலபொலிஸ் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று அணிவகுப்புச் செய்து வெளி யேறுவவற்கு முன்னரே 60 பொலிசார்அடங்கிய இரண்டு பகுதிகளை அரசு மெதிரிகிரிய விற்கு அனுப்பி வைத்துள்ளது இராணுவத்துக்கு ஏற்பட்ட ஆள் பற்றாக்குறையே இதற் கான காரணமாகும் என்றும்-

வடக்கிலும் கிழக்கிலும் புலி கள் இராணுவ முன்னணிப் பாதுகாப்புவேலிகளைஉடைத் துக் கொண்டு வெற்றிகரமாக ஊடுருவ முடிந்தது முன்ன ணிப் பாதுகாப்பு நிலைகள் பலவீனமாக இருந்ததைப் பயன் படுத்திக் கட்டைக்காட் டில் புலிகள் ஊடுருவித் தாக் கிப் பாரிய இழப்புக்களை ஏற் படுத்தியுள்ளார்கள். வடக்கி லும் கிழக்கிலும் புலிக ளின் தாக்குதலைத் தாக்குப் பிடிக்க பக்கம் பக்க மாக ஆழமான அரண்கள் அமைத்து இராணுவம் நிலை கொண்டுள்ளது எனவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தின் தளர்ச்சியைப்போக்க புதிய யுத்த தந்திரோபாயம்

சிங்களப் படையினர் தொடர்ந்தும் பாரிய உயிரிழ ப்புகளுக்கும் ஆயுத தளபாட இழப்புகளுக்கும் உட்பட்டு வருகின்றனர். உண்மையில் சிங்களப் படையினரின் இரா ணுவத் தந்திரோபாயங்கள் தோல்வியடைந்துள்ளதை சிறி லங்கா அரசு உணர்ந்து கொண்டுள்ளது. இந்நிலையில் படையினரின் இழப்புகளை இயன்றளவு குறைத்து இரா ணுவ வெற்றிகளைப் பெறுவ தற்காகப் புதிதான ஒரு போர் முறைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தொட ங்கியுள்ளது என விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ பத் திரிகையான 'விடுதலைப் புலிகள்' செய்தி வெளியிட் டுள்ளது.

மேலும் இந்த நோக்குட னேயே விமானத் தாக்குதல் கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கடந்த 10 ஆம் திகதி படைத் துறைத் தலைமையில் செய் யப்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்தே புதிய போர் முறைத் திட்டம் அமுலாக்கப் பட்டுள்ளது.

படையினர் மத்தியில் இழப் புகளை குறைப்பதன் மூலம் அவர்களின் போரிடும் உறு தியை மீண்டும் கட்டி வளர் க்க படைத்துறைத் தலைமை முனைந்து நிற்கின்றது. இந்த வகையில் எதிர்வரும் நாட் களில் வட தமிழீழததில் கடல் வழி பற்றும் வான்வழி தாக் குதல்கள் மேலும் தீவிரப்படு த்தப்படலாம். இதற்கான தனது ஆதரவை சிங்கள அர சும் தெரிவித்துள்ளது.

சிங்கள பௌத்த பேரின வாதத்தின் மிகமுக்கிய அர சியல் இலக்கு தென் தமிழீழ த்தை சிங்களமயப்படுத்துதலா கும். இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளை யும் புதிய படைத்தலைமை மேற்கொண்டுவருகிறது.

இதனால் தென் தமிழீழத் தில் படைக் குவிப்பை முனைப் பாக்கியுள்ளது. குடியேற்ற வாசிகளையும் ஆயுத மயபபடு த்தி குடியேற்றத் திட்டங்க ளைப் பாதுகாக்க முனைந்துள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# முப்பது நாட்களில் 101 இராணுவத்தினர் பலி

(யாழ்ப்பாணம்)

செப்ரெம்பர் 26 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 25 ஆம் திகதி வரையிலான 30 நாட்களில், 101 சிங்களப் படையினர் கொல்லப்பட்ட னர். 249 ஆயுதங்களும், 3 இலட்சத்துக்கும் அதிகமான ரவைகளும், ஏராளமான வெடி பொருள்களும், படைத் தளபாடங்களும் கைப்பற்றப் பட்டுள்ளன. 55 புலிவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர் என

(04ஆம் பக்கம் பார்க்க)

# பாலையடிவெட்டையில் இரண்டு பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பாலையடி வெட்டை இராணு வத்தினர் அப்பகுதியில் வயல் வேலையில் ஈடுபட்டிருந்த இரு தமிழ் பொதுமக்களை கைது செய்து முகாம் கொண்டுசென் றுள்ளனர்

கடந்த வெள்ளியன்றுகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் காந்திட்போடி சோதிலிங்கம் (வயது 30) 32-ம் கொலனி, பாலையடி வெட்டை, சாமித் தம்பி குணசேகரம் [வயது 23 37-ம் கிராமம்] ஆகியோரே இராணுவத்தால் கைது செய் யப்பட்டவர்களாவர்.

இவர்களின் நிலை என்ன வென்று அறியவரவில்லை.

**வனம் வானுயர வளம் தானுயரும்**

## வரி விளம்பரம்

### ஜெயா அழகு சாதன மாளிகை

எவர் சில்வர், பிளாஸ்ரிக், தையல் உபகரணங்கள் பன்சிகூட்ஸ் பொருள்கள். மொத்த சில்லறை விற்பனை நிலையம். ஜெயா அழகு சாதன மாளிகை 177- A மின்சார நிலைய வீதி 160, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம். (சி-5250)

### தேவை

ஜாம் வெற்றுப் போத்தலும் மூடியும் நியாயமானவிலையில் பெற்றுக் கொள்ளப்படும். உடனடியாகத் தேவை. வேலவன் ஸ்ரோர்ஸ். 608/2 பருத்தித்துறை வீதி, நல்லூர் கோயில் முன்பாக. (3528)

### விளாம்பழங்கள் தேவை

நன்றாக பழுத்த விளாம்பழங்கள் கொள்வனவு செய்யப்படும். விலை விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். சுரபி உணவு பதனிடல் நிறுவனம், பிரதேசசபை முன் வீதி, கோப்பாய் தெற்கு கோப்பாய். (சி-5315)

### "சுவடுகள்"

மீரா வெளியீடு இயல்வாணன் எழுதிய இந்த நாவலில்... "மௌனங்களைப் பிளந்து ஒரு வார்த்தை வெடிக்கிறது. இருளைக் கிழித்து ஒரு விடியல் பிறக்கிறது! சூரியனைத் தேடி ஒரு சுதந்திரபபூ மலர்கிறது." (3502)

## மாடு திருடியோர் கைது

கடந்த சில தினங்களுக்கு முன் கோண்டாவில் பகுதியில் மாடு திருடிய உடுவில் மல்வம் பகுதியைச் சேர்ந்த இருவர் சுன்னாகம் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி நபர்கள் சைக்கிள் திருட்டுக்களுக்காகவும் தேடப்பட்டு வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தாங்கள் தொடர்ந்து சைக்கிள் திருட்டுக்கள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுத்துவருவதாகச் சுன்னாகம் காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [11] [09]

## பத்திரிகையாளரின் கண்டனக் கூட்டம்

[நுவரெலியா]

கடந்த காலங்களில் பத்திரி

# கற்பிட்டிக் கடலில் 'கன்டுல' மூழ்கியது: சிங்கள ராணுவத்திற்குப்பின்னடைவு;

## வை- 8 இன் பின் ஏற்பட்ட பேரிழப்பு

பலகோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் இராணுவ தளபாடங்களையும் ஏற்றிக்கொண்டு கொழும்பில் இருந்து மன்னாருக்கு சென்ற கடற்படை கப்பலான 'கன்டுல' கற்பிட்டி கடற்படை முகாமில் இருந்து இரண்டரை மைலுக்கு அப்பால் கடலில் தாழ்ந்து விட்ட சம்பவம் இம்மாதத்தில் நடைபெற்றஇரண்டாவதுபாரிய ஆயுத இழப்பாகும்

இம்மாதம் முதலாம் திகதி நள்ளிரவு கட்டைக்காடு இராணுவ முகாம் தாக்கப்பட்டு ஐந்து கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் புலிகளினால் அபகரித்து செல்லப்பட்டுவிட்டன. இரண்டாவது சம்பவம் கடந்த 9ஆம் திகதி கற்பிட்டி கடலில் நடந்தது.

கடந்த மாதம் மன்னார் மாவட்டத்தில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட "சிக்ரபார" இராணுவ நடவடிக்கையின் மூலம் இரண்டு உதவி அதிபர் பிரிவுக்கு உட்பட்ட நானாட்டன், உயிலங்குளம், அடம்பன், பாப்பாமோட்டை, மாந்தை, முருங்கன் ஆகிய பகுதிகளை கைப்பற்றினர். இப்பகுதிகளில் அவசர அவசரமாக பல இராணுவ முகாம்கள் திறக்கப்பட்டன.

இந்த முகாம்களில் கடமையாற்றும் பாதுகாப்பு படையினருக்கு தேவையான ஆயுதங்கள் தோட்டாக்கள், வெடிமருந்துகள், இராணுவ தளபாடங்கள், உணவுப்பொருட்கள் ஆகியன கன்டுல கப்பலில் (இதை "லேன்டிங் கிராப்ட்" என அழைப்பார்கள்) கொழும்பில் இருந்து கடந்த எட்டாம் திகதி மன்னாருக்கு அனுப்பி வைத்தனர். இதில் நான்கு கொள்கலன்களில் ஆயுதங்களும் இராணுவ தளபாடங்களும் இருந்தன. இவை பல கோடி ரூபா பெறும் எனக்கூறப்படுகிறது. இக்கப்பலுக்கு பாதுகாப்பாக "சூரயா பீரங்கிப்படகும்அனுப்பப்பட்டது கப்பலில் 12 இராணுவவீரர்களும் ஐந்துபொலிஸாரும்17கடற்படை வீரர்களுமாக 34பேர் இருந்தனர் இக்கப்பலுக்கு லெப்டினன் கமாண்டர் வீரசேகர பொறுப்பாக இருந்தார்

கடல் கொந்தளிப்பு அதிகமாக இருப்பதாலும் பொருட்களின் எடை கூடுதலாக இருப்பதை காரணம் காட்டியும் மன்னார் பிரயாணத்தை ஒத்திவைக்குமாறுதலைமைப்பீடத்திடம் வேண்டுகோள் விடுத்தாராம் எனினும் ஆயுதபற்றாக்குறையைக காரணம் காட்டி உடனடியாக கப்பலை எடுத்துச் செல்லுமாறு மேலதிகாரிகள் அவரை பணித்தனராம்.

கன்டுல கப்பல் 1986 ஆம் ஆண்டு கொரியாவில் இருந்து வாங்கப்பட்டது. இதன் பெறுமதி இருபது கோடி (2000 லட்சம்) ரூபாவாகும். மன்னார், வெற்றிலைக்கேணி, காரைநகர்,மூதூர், போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான இராணுவ நடவடிக்கைகளுக்கு இந்த 'கண்டுல' கப்பல் மூலமே துருப்புக்களும் இராணுவ தளபாடங்களும் எடுத்துச் செல்லப்பட்டன

கடற்கரையை அண்டிய சுமார் பத்தடி ஆழத்தில் நின்று கப்பலில் உள்ள பாரிய ஏணிமூலம் இராணுவ டாங்கிகளை இறக்கும் வல்லமை

## இரா- செல்வராஜா

இதற்கு உண்டு. இதனால்தான் இக்கப்பலை'லோன்டிங் கிராப்ட்' என அழைப்பார்கள்

இவ்வாறான இன்னும் ஒரு லோன்டிங் கிராப்ட் மாத்திரமே கடற்படையிடம் உள்ளது. இது ஒரு சீனத்தயாரிப்பாகும்.

'கன்டுல' கப்பல் கற்பிட்டிக்கு அருகில் செல்லும்போது கடல் சீற்றத்தினால் நீர் கப்பலின் உள்ளே புகுந்துள்ளது. நீரைவெளியேற்றும் இயந்திரம்இயங்கமறுத்ததால் நீர் கப்பலில் இயந்திர அறைக்கும் ஜெனரேட்டருக்கும் புகுந்து கப்பலின் இயக்கத்தை நிறுத்தியுள்ளது. பின்னர் கப்பலின் உள்ளே அதிகளவு நீர் புகுந்ததினால் கப்பல் அமிழ ஆரம்பித்துள்ளது பாதுகாப்புக்காக வந்த சூரயா பீரங்கி படகு இது பற்றி கல்பிட்டி முகாமிற்கு அறிவித்து அவசர உதவி கோரியுள்ளது கப்பலில் இருந்த படையினரை மாத்திரமே பீரங்கிப் படகில் இருந்தவர்களால் காப்பாற்ற முடிந்தது கற்பிட்டி முகாமில் இருந்து கடற்படை படகுகள் வரு முன்னர் கப்பல் கடலில் தாழ்ந்து விட்டது

இக் கப்பலின் இழப்பினால் இராணுவ நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை ஏனெனில் ஆயுதங்களையும் இராணுவ தளபாடங்களையும் எடுத்துச் செல்ல முதுகெலும்பாக இருந்த வை - 8 விமானம் ஆனையிறவுக்கு அப்பால் விழுந்து நொருங்கிய பின்னர் இந்த கன்டுல கப்பலே முழுப்பொறுப்பையும் ஏற்றிருந்தது என்று சிரேஷ்ட கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

அமிழ்ந்து போன இந்தக் கப்பலில் இருந்த ஆயுதங்களின் பெறுமதி கட்டைக்காட்டில் பறிகொடுத்த ஐந்து கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை விட பல மடங்கு அதிகமானது என பெயர் குறிப்பிட விரும்பாத உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆயுத இழப்புக்கு மத்தியில் இன்று இராணுவத்தில் ஆட்களையும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

கடந்த ஆகஸ்ட் 8-ம் திகதி முதல் அக்டோபர் மாதம் எட்டாம் திகதி வரையிலான அறுபது நாட்களில் இராணுவ நிரந்தர படையில் இருந்து 875 வீரர்களும் தொண்டர் படையில் இருந்து 373 வீரர்களும் படையில் இருந்து விலகி உள்ளனர்.

இராணுவத்தின் நான்கு புதிய பிரிவுகள் தரம்பிரிக்கப்பட்டுள்ள இக் காலகட்டத்தில் படையினர் விலகி வருவது பெரும் சிக்கலை தோற்றுவித்திருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்

நிலைமை இப்படி இருக்க படைகளுக்கு உள்ளே பெரும் பதவிப் போட்டிகளும் இழுபறிகளும் நடந்து வருகின்றன. இப்போராட்டத்தின் பிரசவமே தனித்தனியாக இயங்கி வந்தமுப்படைகளும் பொலிஸ் திணைக்களமும் மீண்டும் கூட்டுப்படை தளபதி லெப்டினண்ட் ஜெனரல் ஹெமில்டன் வணசிங்காவின் தலைமையின் கீழ் கொண்டு வரப்பட்டதாகும். கடந்த ஒன்பதாம் திகதி கூட்டுப்படைகளின் தலைமையகத்தில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் இது பற்றி தெரிவிக்கப்பட்டது.

நன்றி: வீரகேசரி

## மாணவர் தலைவர்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டம்

(நல்லூர்)

நாட்டுக்குத் தேவையான எதிர்காலப் பிரஜையொருவருக்கேற்ற வகையில் கல்வியறிவைப் பெறவும் அதற்கேற்ற வகையில் நடத்தைகளைச் சீராக்கிக் கொள்ளும் விதம் போன்றவை தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு அறிவூட்டும் நோக்கத்துடன் மாணவ தலைவர்களை பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சிதிட்டமொன்றை கோட்ட ரீதியாக இலங்கை பூராவுமுள்ள பாடசாலைகளுக்கு அமுல்படுத்த கல்வி உயர்கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சகல கோட்ட பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கோட்ட ரீதியாக பாடசாலை மாணவ தலைவர்களையும், மாணவ தலைவியர்களையும் அழைத்து வார இறுதி நாட்களில் பயிற்சிகளை நடத்துமாறும் இதற்கேற்ப செயற்படுத்த வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்களையும் கல்வி உயர்கல்வி அமைச்சு இவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதற்குத் தேவையான நிதி கல்வி உயர்கல்வி அமைச்சினால் ஒதுக்கீடு செய்மப்பட்டு வழங்கப்படும் எனவும் இவர் தெரிவித்துள்ளார்.

## வாகன விபத்து 22 பொலிசார் காயம்

[கொழும்பு]

அவிசாவலை பொலிஸ் செயலகத்திற்கு சென்ற பஸ் வண்டி தடம் புரண்டதில் இருபத்திரண்டு பொலிசாடு காயமடைந்துள்ளார்கள் ர

இரவு 11.30 மணியளவில் கண்டியிலிருந்து அவிசாவளை நோககி செல்லும் போ மாவனெல்லவில் இருபெல என்ற இடத்தில் மதகு ஒன்றிற்கு அருகாமையில் இச்சம்பவம்நடைபெற்றுள்ளது.

இதில் பயணம் செய்த ஏனையவர்கள் சிறுகாயமடைந்தனர் என்றும், படுகாயம் அடைந்தவர்கள் சிலரின் நிலைமை மோசமடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது,

## அச்சுவேலி மகாவித்தியாலய நூற்றாண்டுவிழா

(மானிப்பாய்)

1992-ம் ஆண்டு அச்சுவேலி மகாவித்தியாலயம் தனது நூற்றாண்டு சேவையைப் பூர்த்தி செய்துள்ளது. இதனை முன்னிட்டு அச்சுவேலி மகாவித்தியாலய பழையமாணவர் சங்கத்தினரால் கடந்த புதனன்று நூற்றாண்டுவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது இவ்விழாவினைச் சிறப்பிக்கும் முகமாக கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன கடந்த செவ்வாயன்று வீதியோட்டம் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது (07)

## கருத்தரங்கு


இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பிரட்ரிக் ஈபேர்ட் மன்றம் சர்வதேச சுதந்திர ஆசிரியற்சங்க சம்மேளனம் ஆகியவைகள் இணைந்து நடாத்தும் "இலங்கையில் பயிலுனர்" ஆசிரியர்களின் சட்ட ரீதியான அந்தஸ்து என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்றும் நாளையும் யாழ். இந்துக் நல்லூரியில் நடைபெறும். 2)

## ஆங்கில ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சி

ஆங்கில ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிககருத்தரங்குகள் பின்வரும் திகதிகளில் பின்வரும் இடங்களில் காலை 8 30 மணிதொடக்கம் மாலை 3 30 மணிவரை நடைபெற உள்ளது என யாழ் கல்வித் திணைக்களம்அறிவித்துள்ளது

யாழ்ப்பாணம், வேலணை புங்குடுதீவு ஆகிய கோட்டக் கல்வி அலுவலகங்களிற்கும் யாழ் இராமநாதன் கல்லூரியில் இன்று 27ஆம் திகதியும், அடுத்த மாதம் 12ஆம் திகதியும், மருதனார் மடம் கோட்டக்கல்வி அலுவலகத்திற்கும்,யாழ் மானிப்பாய் மளிர் கல்லூரியில் நாளை 28ஆம் திகதியும் அடுத்த மாதம் 13 ஆம் திகதியும், பண்டத்தரிப்புக் கோட்டக்கல்வி அலுவலகத்திற்கும். யாழ் வட இநது மகளிர் கல்லூரி, யாழ் வேலாயுதம் மகா விததியாலயம் ஆகியவற்றில் இம் மாதம் 29 ஆம் திகதியும் அடுத்த மாதம் 14 ஆம் திகதியும் பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலகத்திற்கும், யாழ் சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் இம்மாதம் 31 ஆம்திகதியும்,அடுத்தமாதம் 16ஆம் திகதியும் சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்திற்கும் நடைபெறஉள்ளது என யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (பா)


**1st DEATH ANNIVERSARY**



*W. S. ALEXANDER*

( Retd. Postmaster Manipay )

BORN: 194[illegible]-08-24 DIED: 1991-10-27

"Safe in the arms of JESUS"

Memory Forever Treasured

Wife - JEEVARANJI

Daughters- VALENTIA PARANTHAMAN

DELICIA and all your Loved ones.

Lowton Road,

Manipay South. (3504)

நடந்த சில தினங்களுக்கு முன் கோண்டாவில் பகுதியில் மாடு திருடிய உடுவில் மல்வம் பகுதியைச் சேர்ந்த இருவர் சுன்னாகம் காவல்துறையின ரால் கைது செய்யப்பட்டுள்ள னர்.

மேற்படி நபர்கள் சைக்கிள் திருட்டுக்களுக்காகவும் தேடப் பட்டு வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தாங்கள் தொடர்ந்து சைக்கிள் திருட் டுக்கள் சம்பந்தமாக நடவடிக் கைகள் எடுத்துவருவதாகச் சுன்னாகம் காவல்துறை வட் டாரங்கள் தெரிவித்துள்ளன.

[11] [09]

(இதை ''லேண்டிங் கிராப்ட்'' என அழைப்பார்கள்) கொழும் பில் இருந்து கடந்த எட்டாம் திகதி மன்னாருக்கு அனுப்பி வைத்தனர். இதில் நான்கு கொள்கலன்களில் ஆயுதங்க ளும் இராணுவ தளபாடங்க ளும் இருந்தன. இவை பல கோடி ரூபா பெறும் எனக்கூற ப்படுகிறது. இக்கப்பலுக்கு பாதுகாப்பாக ''சூரயா பீர ங்கிப்படகும்அனுப்பப்பட்டது கப்பலில் 12 இராணுவவீரர்க ளும் ஐந்துபொலிஸாரும்17கட ற்படை வீரர்களுமாக 34பேர் இருந்தனர் இக்கப்பலுக்கு லெப்டினன் கமாண்டர் வீர சேகர பொறுப்பாக இருந்தார்

கடல் கொந்தளிப்பு அதிக மாக இருப்பதாலும் பொருட் களின் எடை கூடுதலாக இருப் பதை காரணம் காட்டியும் மன்னார் பிரயாணத்தை ஒத் திவைக்குமாறுதலைமைப்பீட டிக்கு அருகில் செல்லும் போது கடல் சீற்றத்தினால் நீர் கப்பலின் உளளே புகுந் துள்ளது. நீரைவெளியேற்றும் இயந்திரம்இயங்கமறுத்ததால் நீர் கப்பலில் இயந்திர அறைக் கும் ஜெனரேட்டருக்கும் புகு ந்து கப்பலின் இயக்கத்தை நிறுத்தியுள்ளது. பின்னர் கப் பலின் உள்ளே அதிகளவு நீர் புகுந்ததினால் கப்பல் அமிழ ஆரம்பித்துள்ளது பாதுகாப் புக்காக வந்த சூரயா பீரங்கி படகு இது பற்றி கல்பிட்டி முகாமிற்கு அறிவித்து அவசர உதவி கோரியுள்ளது கப்பலில் இருந்த படையினரை மாத் திரமே பீரங்கிப்படகில் இருந் தவர்களால் காப்பாற்ற முடிந் தது கற்பிட்டி முகாமில் இரு ந்து கடற்படை படகுகள் வரு முன்னர் கப்பல் கடலில் தாழ்ந்து விட்டது

இக் கப்பலின் இழப்பினால் வது பெரும் சிக்கலை தோற்று வித்திருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் கருத்து தெரி விக்கின்றனர்

நிலைமை இப்படி இருக்க படைகளுக்கு உள்ளே பெரும் பதவிப் போட்டிகளும் இழு பறிகளும் நடந்து வருகின்றன. இப்போராட்டத்தின் பிரச வமே தனித்தனியாக இயங்கி வந்தமுப்படைகளும் பொலிஸ் திணைக்களமும் மீண்டும் கூட் டுப்படை தளபதி லெப்டின ன்ட் ஜெனரல் ஹெமில்டன் வணசிங்காவின் தலைமையின் கீழ் கொண்டு வரப்பட்டதா கும். கடந்த ஒன்பதாம் திகதி கூட்டுப்படைகளின் தலைமை யகத்தில் இருந்து வெளியிடப் பட்ட அறிக்கையில் இது பற்றி தெரிவிக்கப்பட்டது.

நன்றி: வீரகேசரி

ந்தனர் என்றும், படுகாயம் அடைந்தவர்கள் சிலரின் நிலைமை மோசமடைந்துள்ள தாகவும் தெரிய வருகின்றது,

## அச்சுவேலி மகாவித்தியாலய நூற்றாண்டுவிழா

(மாணிப்பாய்)

1992-ம் ஆண்டு அச்சுவேலி மகாவித்தியாலயம் தனது நூற்றாண்டு சேவையைப் பூர்த்தி செய்துள்ளது. இதனை முன்னிட்டு அச்சுவேலி மகா வித்தியாலய பழையமாணவர் சங்கத்தினரால் கடந்த புத னன்று நூற்றாண்டுவிழா வெகு விமரிசையாகக் கொண் டாடப்பட்டது இவ்விழா வினைச் சிறப்பிக்கும் முகமாக கலை நிகழ்வுகளும் இடம்பெற் றன கடந்த செவ்வாயன்று வீதியோட்டம் நடைபெற்ற தும் குறிப்பிடத்தக்கது. (07)



**W. S. ALEXANDER**

(Retd. Postmaster Manipay)

BORN: 194?-08-24 DIED: 1991-10-27

"Safe in the arms of JESUS"

Memory Forever Treasured

Wife - JEEVARANJI

Daughters - VALENTIA PARANTHAMAN

DELICIA and all your Loved ones.

Lowton Road,
Manipay South.

(3504)

## பத்திரிகையாளரின் கண்டனக் கூட்டம்

[நுவரெலியா]

கடந்த காலங்களில் பத்திரி கையாளர் தாக்கப்பட்ட சம்ப வங்களைத் தொடர்ந்துபத்தி ரிகையாளர்சுதந்திரம் வேண்டி நவம்பர் 1ஆம் திகதி நுவ ரெலியாவில் ஊர்வலமும் கண் டனக் கூட்டமும் நடைபெற இருக்கிறது.

ராவய-யுக்திய ஆகிய பத் திரிகையாளர்களும், வாசக ரும் அண்மையில் நுவரெலி யாவில் தாக்கப்பட்டமையி னாலேயே நுவரெலியாவில் இவ் ஊர்வலம் நடைபெற வுள்ளதாகதெரிவித்துள்ளனர்.

## என் சடலத்தின் மீது தான் அநுரா தலைவராகலாம்

-சிறிமாவோ

(கொழும்பு)

எனது சடலததின் மீதுதான் அநுரா பண்டாரநாயக்கா கட்சித்தலைமையை பெற்றுக் கொள்ள முடியும் என்று திருமதி சிறிமாவோ கூறியுள்ளார்.

சில பௌத்த குருமார் சுதந் திரக்கட்சித் தலைவியின் றோஸ் மீட் பிளேஸ் இல்லத் தின் முன்பாக கூடியிருந்த போது அவர்களிடையே கண் ணீர் மல்கப்பேசிய திருமதி சிறிமாவோ மேலும் கூறுகை யில்; தனது மகன் தம்மை மிர ட்ட பல வழிகளைக் கைக் கொள்வதாகவும் இத்தகைய தந்திரவேலைகளால் தம்மைத் தடுக்கமுடியாது என்றும்குறிப் பிட்டார்.

## வடமராட்சி கிழக்கில் குண்டுவீச்சு

வடமராட்சி கிழக்குப் பகுதி யில் நேற்று முன்தினம் சிறி லங்கா விமானப் படையி னர் மேற்கொண்ட கண்மூடித்தனமான குண்டு வீச்சினால் ஐந்து வீடுகளும், பேக்கரி ஒன்றும் சேதமடைந் துள்ளது.

கடந்த வெள்ளியன்றும் வட மராட்சி கிழக்கில் குடத்தனை மேற்குப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத் தியிருந்தது தெரிந்ததே.

நேற்று முன்தினம் காலை பத்து மணியளவில் நான்கு பொம்மர்விமானங்கள் தாழை யடி, செம்பியன்பற்று, மரு தங்கேணிப் பகுதியில வைத் தியசாலைக்கு அண்மையில் ஆறு குண்டுகளை வீசியது.

இக்குண்டு வீச்சினால் உயி ரிழப்பு எதுவும் ஏற்பட்டதாக தெரியவராதபோதும் ஐந்து வீடுகள், மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ,சயிக்கிள்கள்உட் பட பலத்தசேதம்அடைந்தன

## மண்ணெண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை லநோக்கு கூட்டுறவு சங்கத்தின்ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கிளை யில் லீற்றர் ரூபா 38 வீதம் சகல பங்கீட்டுஅட்டைகளுக் கும் மண்ணெய் விநியோகிக் கப்படவுள்ளது என்று சங்கத் தின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

**மாணவர் வதிவிடம்**

யாழ். பல்கலைக்கழக, மாணவர்கள் தங்கியிருப் பதற்கு வீடுகள்/அறைகள் தேவைப்படுகின்றன.

யாழ். பல்கலைக்கழகத் திற்கு அண்மையில் வீடுகள் உடையவர்கள் வீட்டினை/ அறைகளை வாடகைக்கு கொடுக்க விரும்பினால் பல் கலைக்கழக நலச்சேவைகள் கிளை உதவிப்பதிவாள ரைச் சந்தித்து இதற்கென வுள்ள படிவத்தை பெற்று, பூரணப்படுத்திய விண்ணப் பங்களை 03. 11. 1992ற்கு முன்னர் அவ்வலுவலகத் திற்குகிடைக்கச்செய்யவும்.

பதிவாளர்.

(சி-5316)

கறுப்பு வெள்ளி

## சம்பவம்பற்றிவிசாரணைக்கு ஜனாதிபதிகமிஷன்வேண்டும்

கறுப்பு வெள்ளிக்கிழமை யன்று மருதானைப் பகுதியில் நடந்தசம்பவங்கள்தொடர்பா கவும் இச்சம்பவங்களின் பின் னணிகள் பற்றி ஆராயவும் ஜனாதிபதி கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும்

இவ்வாறு சுதந்திர தொழி ற்சங்க சம்மேளனத்தின் தலைவர் ஜனாப் அல்வி மௌ லானா கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இதேவேளை கறுப்பு வெள் ளியன்று நடந்த அசம்பாவித சம்பவங்களுக்கு பேரினவாத சக்திகளே காரணமென்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம் அஷ்ரப் குற்றம் சாட்டியுள்ளார்.

## வட பிராந்திய வர்த்தகர் சங்கம் கலந்துரையாடல்

யாழ். சகலதுறை வர்த்தகர்களுக்கும் ஓர் கலந்துரை யாடல் இன்று 27-10-92 செவ்வாய்கிழமை மாலை 3 00 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள ''பொண்ட்'' கல்வி நிலையத்தில் நடைபெறும்.

மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மற்றும் பிரமுகர் பங்குபற்றுவார்கள். சகல வர்த்தகர்களும் தவ றாது சமுகம் கொடுக்கவும்.

நன்றி.

இங்ஙனம்

நா.த. அன்னலிங்கம்
செயலாளர்

செ. கந்தசாமித்துரை
தலைவர்

(3530)

## பாடசாலை மினிபஸ் சேவை

முன்பு நடாத்தப்பட்டு காலச் சூழ்நிலையால் இடை நிறுத்தப்பட்டு மீண்டும் அனேகரின் வேண்டுகோளுக் கிணங்க 1- 11- 92-ல் இருந்து நடாத்தப்படவுள்ளது.

1ஆம், 2ஆம்,3ஆம் ஆண்டுகளுக்குரிய மாணவ மாண விகளுக்காக நடாத்தப்படும்.

புன்னாலைக் கட்டுவனிலிருந்து பலாலிவீதி ஊடாக யாழ்ப்பாணம் வரை மாணவ மாணவிகள் சொந்த இல் லங்களிலிருந்து கூட்டிச் செல்லப்படுவர்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

பொ. சதா
வி. ரி. எஸ். ஒழுங்கை
உரும்பராய் தெற்கு

(சி-5312)

## புதிய அரசியல் கட்சி கொழும்பில் உதயம்

சிறிலங்கா மக்கள் காங்கிரஸ் என்ற பெயரில் புதிய அரசி யல் கட்சியொன்று ஆரம்பிக் கப்பட்டுள்ளது. கடந்த சனி யன்று கொழும்பு புறக் கோட்டை நகர மண்டபத்தில் சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கிவைக்கப்பட்ட இக் கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சிறப்பு விருந்தின ராக சபாநாயகர் எம். எச் முகம்மது கலந்துகொண்டார். பலவேறு கட்சித் தலைவர் களின் வாழ்த்துச் செய்திகளும் இங்கு வாசிக்கப்பட்டன.

## நினைவு கூருகின்றோம் 1992-10-27

1986-ம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காய முற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய் திய-

ஞானம் (சின்னையா கிறிஸ்துராஜா - 3 - ம் வட்டா ரம், கட்டைபறிச்சான்)

1987-ம் ஆண்டு கோண்டாவில் ரயில் நிலையப்பகுதி யில், இந்தியப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

கணேஸ் (பொன்னுத்துரை-தர்மலிங்கம் செல்வபுரம், உரும்பராய் தெற்கு-யாழ்)

சாவகச்சேரி பொதுச்சந்தை மீது உலங்குவானூர்தி யிலிருந்து இந்தியப்படையினர் மேற்கொண்ட கண்மூடித் தனமான எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஏராளமான பொதுமக்கள்.

1988-ம் ஆண்டு அக்கரைப்பற்றுப்பகுதியில் இந்தி யப்படை மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய-

லெப் . குமார் (முருகேசு உதயகுமார் - அக்கரைப் பற்று-07)

லெப்.சுதா (கனகசூரியர் திருச்செல்வம் அம்மன் கோவில் வீதி, கல்முனை-02)

அகஸ்ரின் (சம்சுதீன் அபுல்கசன் அக்கரைப்பற்று-05)

1991-ம் ஆண்டு வெலிகந்தைப்பகுதியில், சிறிலங் காப்படையினர் மீதான திடீர்தாக்குதலில் வீரச்சாவெய் திய-

மட்டு-அம்பாறைப்பிராந்தியத்தில் வீரச்சாவெய்திய முதல் பெண் போராளி-

2-ம் லெப்.நிலா (நிர்மலாதேவி கிருஸ்ணபிள்ளை குருமண்வெளி மட்டக்களப்பு)

அம்பாறை 16ஆம் கிராமப்பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப்.பாலா (சுப்பிரமணியன்நாகப்பன்—கொம் மாந்துறை மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவுகூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5314)

### சிந்தனைக்கு

நூல்களை விட நுட்பமான நோக்குதல்,
ஆட்சளை விட அனுபவம் இவையே
கல்வி புகட்டும் தலையாய ஆசான்கள்
— ஏமாஸ் பிரான்ஸன் ஆல்காட்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 27-10- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## "பொரிமாத் தோண்டி"

கிழக்கு மாகாணத்திலிருந்து இன்னமும் இரு மாதங்களில் சிறிலங்கா இராணுவம் விலகிக் கொள்ளவும், அந்தந்த இடங்களில் தமது அமைப்பினர்களை நிலைநிறுத்திக் கொள்வது தொடர்பாகவும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடந்து வருவதாக சிங்கள இராணுவத்துடன் இணைந்து செயலாற்றிவரும் ஈ.பி.டி.பியின் பேச்சாளர் ரமேஷ் கூறியுள்ளார்.

ஈ.பி.டி.பியின் இவ் அறிவிப்பானது, தமிழ் மக்கள் மத்தியில் பரம்பரை பரம்பரையாக நிலவிவரும் 'பொரிமாத்தோண்டி' என்னும் கர்ண பரம்பரைக் கதையையே ஞாபகமூட்டுவதாகவுள்ளது ஒரு மண் பானையில் வைத்திருக்கும் பொரிமாவினைக் கொண்டு ஒரு பெரும் தனவந்தனாக தான் மாறுவதாகக் கனவு காணும் ஒருவன், கனவில் செல்வந்தனானபின் மனைவிக்கு உதைப்பதாக எண்ணி 'பொரிமா' உள்ள பானையைக் காலால் உதைத்து உடைப்பதாகவும் இக்கதை உள்ளது.

அதாவது சிறிலங்கா இராணுவமும், இந்திய இராணுவமும் பல வருடங்களாகப் போராடிய பின்னரும் வெற்றி பெற முடியாத நிலையில் இவற்றிற்கும் மேலான சக்தியாகத் தன்னை வெளிக்காட்டி ஈ.பி.டி.பி. அறிக்கை வெளியிட்டுள்ளது. ஈ.பி.டி.பியின் அறிக்கை குறித்து இக்கதையை விட வேறு ஒன்றும் உடனடியாக ஞாபகமூட்டுவதற்குக் கிடைக்கவில்லை.

ஏனெனில், ஈ.பி.டி.பியின் வரலாறும், அதன் செயலதிபர் டக்ளஸ் தேவானந்தாவின் இராணுவ வல்லமையையும் சிங்கள மக்கள் சிலவேளை அறியாதவையாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். சிங்கள இராணுவமும் நன்கு அறியும். மறந்து போனவர்களும் இவர்களின் இராணுவ வரலாற்றையும், அவர்களின்தாக்[illegible]

# ஆனையிறவுப் பாதை திறப்பு;
# ராணுவத்தின் தந்திரோபாய நாடகம்

**1990ஆம்** ஆண்டு யூன் 10ஆம் திகதிபோர் ஆரம்பமாகியவுடன் ஆனையிறவுப் பாதை மூடப்பட்டுவிட்டது என்பது எல்லோரும் அறிந்ததே.

இதன் பின்னர் கேரதீவு—சங்குப்பிட்டி பாதை வழியாகவும், கொம்படி — ஊரியான் பாதைகளினூடாகவும்,நாமும் மக்களும் போக்குவரத்தைச் செய்து வந்தோம்.

1991ஆம் ஆண்டு யூலை மாதம், ஆனையிறவுத் தளத்தைச் சுற்றி நாம் ஒரு முற்றுகையைச் செய்தோம். அதே மாதம் 10ஆம் திகதி தளத்தைக் கைப்பற்றுவதற்கான பெரும் தாக்குதலை ஆரம்பித்தோம். 800 இராணுவத்தினரைக் கொண்டிருந்த அத்தளம், ஒரு சில நாட்களில் எமது கையில் வீழ்ந்துவிடும் நிலையிலிருந்தது.

ஆனால். சிங்கள அரசு தனது முப்படைகளினதும் பலங்களை ஒருங்கு திரட்டி, ஒரு பெரிய படையெடுப்பை நடாத்தி வந்து தளத்தைப் பாதுகாத்தது

800 பேர் கொண்ட ஆனையிறவுத் தளத்தைப் பாதுகாக்க 8000 பேர் கொண்ட பெரும் படை 14-7-91அன்று வெற்றிலைக்கேணியில் தரையிறங்கியது.தரையிறக்கப்பட்ட படையினருடன் நாம் கடும் சமர் புரிந்தோம்.

வெடிகுண்டுகளை விதைத் [illegible]

திலிருந்து ஆனையிறவுத் தளம் வரை அமைக்கப்பட்ட இராணுவ வேலியில், சுமார் 8000 படையினர் குவித்து வைக்கப்பட்டுள்ளனர்.

கல்முனையிலிருந்து பூநகரி வரை அமைக்கப்பட்ட இராணுவ வேலியில், சுமார் 2000 படையினர் நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்விதம் சுமார் 10,000 படையினரைக் கொண்டு, குடா நாட்டுடனான போக்குவரத்தை தடுத்து நிறுத்த, அரசு முயன்றது; ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை.

இப்போதும் கிளாலியூடாக கடல்நீரேரியில்பயணம் செய்து நாமும்மக்களும், போக்குவரத்துக்களைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றோம்.

இதன் காரணமாக திட்டமிட்டபடி, சிறிலங்கா அரசானது தனது இராணுவ நோக்கை நிறைவேற்ற முடியாது போய்விட்டது. அத்துடன் போக்குவரத்தைத் தடை செய்ய வந்த 10,000 படையினரும் இந்த இராணுவ வேலிகளில் பிரயோசனமில்லாது முடங்கிக்கிடக்கின்றனர்.

ஆனால்,குடாநாட்டைச்சூழ சிங்களப் படைகள் இட்டுள்ள முற்றுகையைஉடைத்தெறியும் நோக்குடன், நாம் புதிய போருபாயமொன்றை வரைந்தோம். அதன் ஒரு பகுதியாக இந்த இராணுவ வேலிகளில் ஆங்காங்கே தாக்குதல்களை [illegible]

தங்களையும் கைப்பற்றினோம்.

அதன் பின்னர் 25.09-92 அன்று பூநகரிப் பகுதியில் இருந்த இராணுவ வேலி மீது ஒரு பாரிய தாக்குதலை நடாத்தி, 62 காவல் அரண்களைத் தகர்த்து, 25 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொன்றிருந்தோம். நூற்றுக்கணக்கான படையினர் காவலரண்களை விட்டு ஓடியிருந்தனர்.

மறுநாள் பூநகரியில் திரும்பவும் ஒரு தாக்குதலை நடாத்தி 4 படையினரைக் கொன்று, 5 ஆயுதங்களைக் கைப்பற்றினோம். 14.5 MMZPU - 2ரக கனரகத் துப்பாக்கியும் அழிக்கப்பட்டது.

இவை எல்லாவற்றிக்கும் சிகரம் வைத்தாற் போல 01. 10. 92 அன்று கட்டைக் காட்டில் ஒரு பாரிய தாக்குதலை நடாத்தி, சுமார்3 கி.மீ நீள இராணுவ வேலியை உடைத்தெறிந்தோம்.

30 இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்ட இத்தாக்குதலில் 207 ஆயுதங்களைக் கைப்பற்றியதுடன், சுமார் 3 இலட்சம் ரவைகளையும் ஏராளமான வெடிப்பொருட்களையும் இரு இராணுவ வண்டிகளையும் கைப்பற்றியிருந்தோம். இந்த அற்புத சாதனை இராணுவ வேலியையும் ஈடாட்டம் காணச் செய்துள்ளது.

இவ்விதம் இராணுவ வேலியானது ஆபத்திற்குள் சிக்கியுள்ள இந்த வேளையில் மழைகாலமும் தொடங்கிவிட்டது. இதனால் இன்னும் சிலநாட்களில் ஆனையிறவுக் கடல் நீரேரியில் நீர்மட்டம் உயர்ந்து வெற்றிலைக்கேணி- ஆனையிறவுப் பகுதி வெள்ளக்காடாகிவிடும். இதனால் இப்பகுதியிலுள்ள இராணுவ வேலி நீர்நிலைகளினால் ஆங்காங்கே துண்டாடப்படும். துண்டாடப்பட்ட பகுதிகள் புலிகளின் பாய்ச்சலுக்கு உட்படும்; இராணுவம் பேரிழப்புகளைச் சந்திக்கும் என்பது, படைத்துறைத் தலைமைக்கு நன்கு தெரியும்.

இத்துடன் புலிகளின் தாக்குதல்களை எதிர்கொள்வதற்குச் சிங்களப் படைக்குப் பேருதவி புரியும் தாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகள் என்பவற்றை நீரும் சகதியும்நிறைந்த அப்பகுதியில் பயன்படுத்த [illegible]

படையின் இயலாமையை அப்பட்டமாக வெளிப்படுத்திவிடும் என அரசும் அஞ்சுகின்றது.

இராணுவ வேலி அகற்றப் படுவதற்கும் ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கும் என்ன தொடர்பு என்றொரு கேள்வி எழலாம்.

இந்த இராணுவ வேலியூடாகத்தான் ஆனையிறவுத் தளத்திலுள்ள சுமார் 2000 படையினரது தேவைகள்சென்றடைகின்றன உணவு சமைப்பதற்கான விறகுகள் உட்பட எல்லாப் பொருள்களும் ஆயுத தளபாடங்களும் இவ் வேலி ஊடாகவே அனுப்பப்படுகின்றன.

இந்த இராணுவ வேலி இல்லாவிடின் அனைத்து விநியோகங்களும் வான்வழிமூலம் தான் நடைபெறவேண்டும். ஆனால் இது சாத்தியமில்லை ஏனெனில் முன்னர் 800 பேருடன் ஆனையிறவுத் தளம் இருந்தபோதே, வான்வழி விநியோகங்களை மேற்கொள்ள சிறிலங்கா அரசு பெரும் பொருட்செலவைச் செய்ததுடன் பெரும்சிரமத்தையும் சந்தித்தது. ஆனால் இப்போது ஆனையிறவுத் தளம் விஸ்தரிக்கப்பட்டு 2000 பேரைக் கொண்டிருக்கின்றது. இப்பெருந் தொகையினரின் தேவைகளை வான்வழி மூலம் நிறைவேற்றும்சக்தி சிறிலங்கா வான்படைக்கு இல்லை.

அப்படியானால் ஆனையிறவுத் தளத்தின் ஆட்பலத்தை வெகுவாகக் குறைக்க வேண்டும். ஆட்பலக் குறைப்பென்பது தளத்தின் அழிவுக்குத் தான் இட்டுச் செல்லும் என்பது அனைவருக்கும் நன்கு தெரியும்.

ஆகவே சிறிலங்கா அரசைப் பொறுத்தளவில் வெற்றிலைக் கேணி ஆனையிறவு இராணுவ [illegible]

ஆனையிறவுப் பாதையைத் திறந்துவிட்டால், ஆனையிறவுத் தளத்தைச் சூழ பாதுகாப்பு பகுதி என இணக்கம் கண்டுவிட்டால்,

1. வெற்றிலைக்கேணி - ஆனையிறவு இராணுவ வேலியை அகற்றுவதற்கு சிறிலங்கா அரசுக்கு ஒரு சாட்டும்,அதற்குரிய நியாயங்களும் கிடைத்துவிடும்
2. ஆனையிறவுத்தளமும் புலிகளின் அச்சுறுத்தலிலிருந்து விடுபட்டு விடும்; எனவே குறைந்த படையினருடன் தளத்தைப் பராமரிக்கலாம்.
3. வேண்டிய பொருள்களைத் தரைப் பாதையூடாகச் செல்லும் வாகனங்களிலிருந்து இறக்கிக் கொள்ளலாம்.
4. அகற்றப்படும் இராணுவ வேலியிலிருந்து கிடைக்கும் படையினரைப் பயன்படுத்தி பலாலித்தளத்தை மேலும் விஸ்தரித்து,குடாநாட்டில் மேலும் நிலங்களை ஆக்கிரமிக்கலாம்.
5. தருணம் வரும்போது போக்குவரத்து வாகனங்களையே பாவித்தும்,பிரயாணிகளைக் கேடயமாகப் பயன்படுத்தியும், குடாநாட்டிற்குள் சுலபமாகப் படைகொண்டு நுழையலாம்.

ஆனையிறவுப்பாதைதிறப்பு பற்றிய அரசின் அறிவித்தலின் பின்னால் உள்ள தந்திரோபாய அரசியலை,எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இத்தந்திரோபாயநகர்வைத் தோற்கடித்து சிங்களஅரசிற்கு ஒரு இராணுவ நெருக்கடியை கொடுத்து, குடாநாட்டு மக்களைச் சிங்களப் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பதற்காகத்தான், ஆனையிறவுப் பாதையைத் திறக்க நாம் சம்ம[illegible]

> ஆனையிறவுப் பாதையை மக்கள் போக்குவரத்திற்காகத் திறந்துவிடத் தான் தயாராக இருப்பதாக, சிங்கள அரசு மீண்டும் அறிவித்துள்ளது.
>
> முன்னரைப் போன்றே "பொதுமக்களின் நலனுக்காகவும்" "மனிதாபிமான காரணங்களுக்காகவும்" என்று கூறிக்கொண்டு, தனது நலன்களை - நோக்கங்களை அடைந்துவிட முயல்கிறது.
>
> சிங்கள அரசின் இந்தத் தந்திரோபாய அரசியலை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும்.

> தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வ ஏடான "விடுதலைப்புலிகள்" பத்திரிகையின் ஐப்பசி மாத இதழில் "ஆனையிறவுப் பாதை திறப்பும், யாழ். குடாவின் பாதுகாப்பும்" என்னும் தலைப்பில்வெளியானகட்டுரையைஇங்கே முழுமையாகத் தருகிறோம்.

செல்வந்தனான பின் மனைவிக்கு உதைப்பதாக எண்ணி 'பொரிமா' உள்ள பானையைக் காலால் உதைத்து உடைப்பதாகவும் இக்கதை உள்ளது.

அதாவது சிறிலங்கா இராணுவமும், இந்திய இராணுவமும் பல வருடங்களாகப் போராடிய பின்னரும் வெற்றி பெற முடியாத நிலையில் இவற்றிற்கும் மேலான சக்தியாகத் தன்னை வெளிக் காட்டி ஈ. பி. டி. பி. அறிக்கை வெளியிட்டுள்ளது. ஈ. பி. டி. பியின் அறிக்கை குறித்து இக்கதையை விட வேறு ஒன்றும் உடனடியாக ஞாபகமூட்டுவதற்குக் கிடைக்கவில்லை.

ஏனெனில், ஈ. பி. டி. பி யின் வரலாறும், அதன் செயலதிபர் டக்கிளஸ் தேவானந்தாவின் இராணுவ வல்லமையையும் சிங்கள மக்கள் சிலவேளை அறியாதவையாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். சிங்கள இராணுவமும் நன்கு அறியும். மறந்து போனவர்களும் இவர்களின் இராணுவ வரலாற்றையும், அவர்களின் தாக்குதல்களையும் ஞாபகப்படுத்திப் பார்ப்பதன்மூலம் புரிந்து கொள்ளலாம்.

இன்றைய ஈ. பி. டி. பி யின் செயலதிபரும், முன்னாள் ஈ.பி.ஆர். எல். எவ் வின் "மக்கள் விடுதலைப் படையின் தளபதியுமான 'தோழர்' டக்கிளஸ் தேவானந்தா தலைமையில் அவர்களின் 'புகழ் பூத்த' காரைநகர் கடற்படை முகாம் மீதான தாக்குதலும், கிளிநொச்சி பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலுமே இவர்களின் 'புகழ் பாடப்' போதுமானதாகும்.

காரைநகர் கடற்படை முகாம் மீது தாக்குதலின் வெற்றி தோல்வி அறியப்படும் முன்னரே முகாமைக் கைப்பற்றி விட்டதாக வானொலிக்குச் செய்தியும், போஸ்டர்களில் விளம்பரமும் செய்து விட்டு களத்திற்குச் சென்ற தமது 'தோழர்களின்' நிலை என்ன? என்பது பற்றி அறிய முடியாது யாழ்ப்பாண வீதிகளில் அவரது தோழர்கள் முகத்தைத் தொங்கப் போட்டவண்ணம் குழம்பிப்போய் அலைந்ததை எவரும் மறந்திருக்க நியாயமில்லை. அதில், தமது தானைத் தளபதிகளைப் பறிகொடுத்து தோல்வியைத் தழுவிக் கொண்டதும் மறந்து போகக் கூடியதல்ல.

இதேபோன்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் முன் இருந்த மின்சாரக் கம்பத்தைக் கட்டுப்பாடு இன்றி சென்ற வாகனத்தால், மோதிச் சாய்த்து விட்டு, தலை தப்பினால் போதும் எனத் தறிகெட்டு ஓடிவந்தவர்கள், கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலில் 75 வீதமான பொலிஸாரும், கட்டடங்களும் சேதம் என அறிக்கை வெளியிட்டமையையும் அவர்களின் "சாதனைப்பட்டியலில்" சேரக்கூடியதே.

இவ்வாறெல்லாம் 'வீரம் செறிந்த' பத்திரிகைகள், சுவரொட்டிப் போர்கள் நடத்திய ஈ. பி. டி. பி. தலைவரும், அவரது குழுவினரும் மீண்டும் ஒரு பத்திரிகைப் போரை விடுதலைப் புலிகளுக்கு எதிராக அண்மைக் காலமாக நடத்தி வருகின்றனர். 'தமிழ் இனத்தின் கோடாரிக் காம்புகள்' என முன்னரே பெயர் வாங்கிவிட்ட இவர்கள் புலிகளைத் தோற்கடிக்கப் போவதாக வெளியிடும் அறிக்கைகள் 'பொரிமாத் தோண்டியின்' கதையை ஞாபகப்படுத்தாமல் வேறுஎதை ஞாபகப்படுத்தும்.

அறிவித்துள்ளது.

முன்னரைப் போன்றே "பொதுமக்களின் நலனுக்காகவும்" "மனிதாபிமான காரணங்களுக்காகவும்" என்று கூறிக் கொண்டு, தனது நலன்களை - நோக்கங்களை அடைந்துவிட முயல்கிறது.

சிங்கள அரசின் இந்தத் தந்திரோபாய அரசியலை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும்.

றிலைக்கேணியில் தரையிறங்கியது. தரையிறக்கப்பட்ட படையினருடன் நாம் கடும் சமர் புரிந்தோம்.

வெடிகுண்டுகளை விதைத்துக்கொண்டு. அங்குலம் அங்குலமாக 12 கி. மீ. தூரத்திலிருந்த ஆனையிறவுத் தளத்தை நோக்கி நகர்ந்த படைகள், சுமார் 23 நாட்களின் பின்னர் தளத்தைச் சென்றடைந்தன.

இதையடுத்து ஒரு சில நாட்களில், மணலாற்றுக் காட்டிற்குள் சிங்களப் படைகள் படையெடுத்துச் சென்றன. தொடர்ந்து 27 நாட்கள் நாம் தொடுத்த தீவிர எதிர்த்தாக்குதல்களின் விளைவாக, சிங்களப் படைகள் பின்வாங்கிச் சென்றன.

ஆனையிறவு. மணலாற்றுச் சமர்களின் பின்னர் சிங்களப் படைத்துறைத் தலைமைபுதிய போர்முறைத் திட்டமொன்றை வரைந்து, அதை நடைமுறைப்படுத்த முயன்றது.

குடாநாட்டைச் சூழ ஒரு முற்றுகை வலையை விரிதது புலிகள்மீது ஒரு இறுதிப் போரை நடாத்திப் போராட்டத்தை ஒடுக்குவதே அத்திட்டமாகும்.

இதில் முதற் கட்டமாக 17-10-91 அன்று காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்து புறப்பட்ட சிங்களப் படைகள் ஊர்காவற்றுறை, மண்டைதீவு வழியாக பூநகரி வரை முற்றுகை வலையை விரித்து, கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையைத் தடைசெய்தன.

இதே போன்று 28-06-92 அன்று வெற்றிலைக்கேணியிலிருந்து கிளம்பிய சிங்களஇராணுவம், ஆனையிறவுத் தளம் வரை ஒரு தொடர் இராணுவ வேலியை அமைத்து கொம்படி - ஊரியான் ஊடான பாதைகளை மூடியது.

குடாநாட்டிற்கான சகல பாதைகளையும் மூடிவிடுவதன் மூலம், புலிகளின் நகர்வைத் தடுத்து நிறுத்தி, அவர்களின் போரிடும் சக்தியைச் சிதைத்து விடலாம் என்பதுதான், குடாநாட்டு முற்றுகைக்கான பிரதான இராணுவ நோக்கம் ஆகும்.

வெற்றிலைக்கேணித் தளத்

நோக்குடன், நாம் புதிய போருபாயமொன்றை வரைந்தோம். அதன் ஒரு பகுதியாக இந்த இராணுவ வேலிகளில் ஆங்காங்கே தாக்குதல்களை நடாத்தி, இராணுவ வேலியைச் சிதைக்க முயன்றோம்.

30-12-91 அன்று, பூநகரிக்கும், ஆனையிறவுக்கும் இடைப்பட்ட கடல்நீரேரியில் ரோந்து சென்று கொண்டிருந்த கடற்படையினரின் படகு அணிமீது தாக்கினோம். இத்தாக்குதலில் 7 படையினர் கொல்லப்பட்டதுடன், ஒரு படகும் மூழ்கடிக்கப்பட்டது.

03-02-92 அன்று, ஆனையிறவுக் கடல்நீரேரியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரின், 41 அடி விசைப் படகைக் கடற்கண்ணிவெடிமூலம் தகர்த்தோம். அதிலிருந்த 4 படையினர் கொல்லப்பட்டனர்.

20-02-92 அன்று பூநகரிக்கு அண்மையில் மான்தீவில் அமைந்திருந்த இராணுவக் காவலரண்மீது கடற் புலிகளின் சிறப்பு அதிரடிப் படையினர் நிகழ்த்திய தாக்குதலில், 7 படையினர் கொல்லப்பட்டதுடன் 7 ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

10-03-92 அன்று, பூநகரிக்கு அண்மையில் மட்டுவில் நாடு என்னுமிடத்தில் நாம் தாக்கி, ஒருவரை கொன்று, அவரின் ஆயுதத்தையும் கைப்பற்றினோம்.

29-03-92 அன்று பூநகரி - கறுக்காய் தீவில் இராணுவக் காவலரண்கள்மீது தாக்கினோம். இதில் 7 படையினர் கொல்லப்பட்டதுடன், 7 ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

09-06-92 அன்று, பூநகரியில் எமது சிறப்பு வேவுப்பிரிவினர் நடாத்திய கண்ணிவெடித் தாக்குதலில், ஒரு இராணுவ வண்டி சிதறியது; அதிலிருந்த கேணல், லெப். கொமடோர், கப்டன் நிலைகளிலான மூன்று படை அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

28. 08. 92 அன்று, சின்ன மண்டலாயில் ஒரு திடீர்த்தாக்குதலைத் தொடுத்து பல காவல் அரண்களை அழித்தோம். இதில் 10 படையினர் கொல்லப்பட்டனர்; 12 ஆயு

காலமும் தொடங்கிவிட்டது. இதனால் இன்னும் சிலநாட்களில் ஆனையிறவுக் கடல் நீரேரியில் நீர்மட்டம் உயர்ந்து வெற்றிலைக்கேணி- ஆனையிறவுப் பகுதி வெள்ளக்காடாகி விடும். இதனால் இப்பகுதியிலுள்ள இராணுவ வேலி நீர் நிலைகளினால் ஆங்காங்கே துண்டாடப்படும். துண்டாடப்பட்ட பகுதிகள் புலிகளின் பாய்ச்சலுக்கு உட்படும்; இராணுவம் பேரிழப்புகளைச் சந்திக்கும் என்பது, படைத் துறைத் தலைமைக்கு நன்கு தெரியும்.

இத்துடன் புலிகளின் தாக்குதல்களை எதிர்கொள்வதற்குச் சிங்களப் படைக்குப் பேருதவி புரியும் தாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகள் என்பவற்றை நீரும் சகதியும்நிறைந்த அப்பகுதியில் பயன்படுத்த முடியாது போய்விடும். இதனால் சிங்களப்படை பாரிய இராணுவத் தோல்விகளைச் சந்திக்கலாம் என, சிங்களத் தளபதிகள் அஞ்சுகின்றனர்.

இந்த நிலையில் வெற்றிலைக்கேணி ஆனையிறவுஇராணுவ வேலியை அகற்றவேண்டிய கட்டாயம் சிங்களப் படைத் தலைமைக்கு எழுந்துள்ளது.

ஆனால் இந்த இராணுவ வேலி அமைக்கப்பட்டதன் நோக்கங்களை அடையாமல் (குடாநாட்டைக் கைப்பற்றுவது) இராணுவ வேலியை அகற்றினால் அது சிங்களப் சிறிலங்கா அரசு பெரும் பொருட்செலவைச் செய்ததுடன் பெரும்சிரமத்தையும் சந்தித்தது. ஆனால் இப்போது ஆனையிறவுத் தளம் விஸ்தரிக்கப்பட்டு 2000 பேரைக் கொண்டிருக்கின்றது. இப்பெருந் தொகையினரின் தேவைகளை வான்வழி மூலம் நிறைவேற்றும்சக்தி சிறிலங்கா வான்படைக்கு இல்லை.

அப்படியானால் ஆனையிறவுத் தளத்தின் ஆட்பலத்தை வெகுவாகக் குறைக்க வேண்டும். ஆட்பலக் குறைப்பென்பது தளத்தின் அழிவுக்குத் தான் இட்டுச் செல்லும் என்பது அனைவருக்கும் நன்கு தெரியும்.

ஆகவே சிறிலங்கா அரசைப் பொறுத்தளவில் வெற்றிலைக் கேணி ஆனையிறவு இராணுவ வேலியை அகற்றவும் வேண்டும். அதே சமயம் ஆனையிறவுத் தளத்தைத் தொடர்ந்து வைத்திருக்கவும் வேண்டும். அத்துடன் தான் ஒருஇராணுவத் தோல்வியைச்சந்தித்ததாக வெளிப்படையாகக்காட்டவும் கூடாது.

இந்த விருப்புகளை ஒரே எத்தனிப்பில் அடையும் நோக்குடனேயே சிங்கள அரசு இந்த "பாதைதிறப்பு" என்ற தந்திரோபாய நாடகத்தை அரங்கேற்றி, ஒரு நெருக்கடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முனைகிறது.

புலிகளின் சம்மதத்துடன் களை ஆக்கிரமிக்கலாம்.

5\. தருணம் வரும்போது போக்குவரத்து வாகனங்களையே பாவித்தும், பிரயாணிகளைக் கேடயமாகப் பயன்படுத்தியும், குடாநாட்டிற்குள் சுலபமாகப் படைகொண்டு நுழையலாம்.

ஆனையிறவுப்பாதைதிறப்பு பற்றிய அரசின் அறிவித்தலின் பின்னால் உள்ள தந்திரோபாய அரசியலை, எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இத்தந்திரோபாயநகர்வைத் தோற்கடித்து சிங்களஅரசிற்கு ஒரு இராணுவ நெருக்கடியை கொடுத்து, குடாநாட்டு மக்களைச் சிங்களப் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பதற்காகத்தான், ஆனையிறவுப் பாதையைத் திறக்க நாம் சம்மதம் தெரிவிக்கவில்லை.

பூநகரி, கொம்படி, ஊரியான் ஊடான பாதைகள் சிங்களப் படைகளினால் தடுக்கப்பட்ட பின்னர் குடாநாட்டு மக்கள் படும் தாங்கொணாத் துன்பங்களை, நாம் நன்கு அறிவோம்.

ஆனாலும்இதுவரை நாளும் எமது போராட்டத்தை வளர்ப்பதற்காக எம்முடன் சேர்ந்து எமது மக்கள் சுமந்த துன்பப் பளுவை இன்னும்சிறிது காலத்திற்கு ஏற்று, நிரந்தர நன்மைகளையும் — மகிழ்ச்சிகளையும் அனுபவிப்போம்.

நன்றி: 'விடுதலைப்புலிகள்'

## கைதிகளை விடுவிக்க செஞ்சிலுவை முயற்சி

# சேர்பியா பின்வாங்கியதால் முட்டுக்கட்டை நிலை

(பெல்கிரேட்)

பொஸ்னியாவில் உள்ள சகல சிவிலியன் மற்றும் இராணுவ கைதிகளை விடுதலை செய்விப்பதற்கு செஞ்சிலுவை மேற்கொண்ட முயற்சிகளில் இருந்து சேர்பியர் வாபஸ் பெற்றுக் கொண்டதனால் தடை ஏற்பட்டுள்ளதாககூறப் படுகிறது.

அடுத்த வாரம் இக் கைதிகளை விடுதலை செய்விப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவை சங்க நிர்வாகக்குழு திட்டமிட்டிருந்தது. இக் கைதிகளுக்கு தஞ்சமளிக்க ஒரு சில மேற்கு நாடுகளேமுன்வந்தன. இதனால் அடுத்தமாதத்திற்கு இத்திட்டத்தை பின்போட வேண்டியதாயிற்று என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைதிகள் விடுதலையை தான் நிறுத்திவிட்டதாக பொஸ்னிய சேர்பியர்களின் தலைவி ரடோவான் கராட்சிச் செஞ்சிலுவை சங்கத்துக்கு கடிதம் எழுதியிருக்கிறார் சேர்பிய கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை என்பதால் முகாம்களை கலைக்கும் திட்டத்தையும் தான் கைவிட்டுவிட்டதாக அவர்கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

## விஞ்ஞானம் விற்பனைமயம் மனவருத்தத்திற்குரியது

விஞ்ஞானத்தை வர்த்தகமயமாக்கும் போக்கு வளர்ந்து வருகின்றமை மனவருத்தத்திற்கு உரியது என்று மத்திய விஞ்ஞானத் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் கூறியுள்ளார்.

இந்தியாவிலும்பிரான்சிலும் விஞ்ஞான வளர்ச்சி என்பது பற்றி சென்னைக்கு அருகே கோவளத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் குமாரமங்கலம் மேலும்கூறுகையில்; இந்தியாவும்பிரான்ஸும் விஞ்ஞான தொழில் நுட்பத் துறையில் நெருங்கி ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் ஆய்வு நிலை மாணவர்களைப் பரிமாறிக் கொள்வது அதிகரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டதுடன் விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு அதிநேரத்திற்கு பயன் படுத்தப்படும் ஒரு கருவியாகி வருகிறது என்றும் கூறினார்

இக் கருத்தரங்கில் பேசிய பிரான்சிய விஞ்ஞானதொழில் நுட்பத்துறை அமைச்சர் பேராசிரியர் கியூபெட் குரியன் சமூகத்திற்கு பயன் தரத்தக்கவகையில் விஞ்ஞான ஆய்வு அமைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்

ஈழநாதம்

## சைவசமய பரீட்சை

காரைநகர் மணிவாசகர் சபையினரால் நடாத்தப்படும் சைவசமயப் பரீட்சை அடுத்த மாதம் பிற்பகுதியில் நடைபெறும் என்று மணிவாசகர் சபைத் தலைவர் திரு. செ. தேவதாசன் அறிவித்துள்ளார்.

## மணலாற்றில் வீரச்சாவடைந்தோர்





லெப் நெடுமாறன் 2-ம்லெப். இறைகுமார் வீரவேங்கை இறையன்

மணலாற்றில் மண்கிண்டி இராணுவ முகாமுக்குஅண்மையில் அமைந்திருந்த இராணுவ காவலரண்கள் மீது 24-10-1992 விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலின் போது மூன்று புலிகள் வீரச்சாவு அடைந்தனர்.

## பதவி துறப்பு

[காபூல்]

ஆப்கானிஸ்தான் இடைக்கால அதிபர் பேராசிரியர் புகானுதீன் ரபானி எதிர்வரும் புதனன்று பதவி துறக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

முன்னரே திட்டமிட்டபடி தாம் பதவியைத் துறந்து தலமைச் சபையிடம் அதிகாரங்களைக் கையளிக்கப் போவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

## தீ விபத்தில் 18 பேர் பலி

(பட்னா)

இந்தியாவின் பீகார் மாநிலத்தில் இருக்கும் தன்பாத் நகருக்கு அருகே பட்டாசுக் கடையொன்றில் நிகழ்ந்த தீ விபத்தில் பதினெட்டுப் பேர் உயிரிழந்தனர். மேலும் பதின்நான்கு பேர் காயமடைந்தனர்.

மின்சார ஒழுக்கின் காரணமாக ஏற்பட்ட தீப்பொறியே இவ் விபத்து நேரிட்டதாக பொலிசார் கூறியுள்ளனர்.

# வெளிநாட்டவர் மீதான பயணக்கட்டுப்பாடு தளர்வு

### ரஷ்யா அறிவிப்பு

(மொஸ்கோ)

வெளிநாட்டவர்கள் மீதான பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தியிருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இது குறித்த தகவல்களை ரஷ்ய வெளியுறவு அமைச்சின் பத்திரிகைத் தொடர்பு அதிகாரியான சேர்ஜியாஸ் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

இது நீண்டகாலமாகவே எதிர்பார்க்கப்பட்டுவந்த முடிவு. இந்த முடிவு தொடர்பாக தூதரகங்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது என்றும்,

ரஷ்ய சம்மேளனத்திலே இனிமேல் மூடிய பகுதிகள் என எவையும் இருக்கப் போவதில்லை. ரஷ்ய பிராந்தியம் பூராவும் பயணம் செய்வதற்கு இனிமேல் அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டியதில்லை என்றும் குறிப்பிட்டார்.

இராணுவ மற்றும் பாதுகாப்புத்துறையுடன் சம்பந்தப்பட்ட நிலையங்களுக்கு விஜயம் செய்வதற்கு மாத்திரமே இனிமேல் வெளிநாட்டவர்களுக்குக் கட்டுப்பாடு இருக்கும், வெளிநாட்டவர்கள் மொஸ்கோவை விட்டு வெளியே செல்வதானால் இனிமேல் அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டியதில்லை. டிக்கெட்டுக்களைப் பெறுவதற்கு விசேட அரச பயண முகவர் நிலையத்திற்கும் செல்லத் தேவையில்லை என்றும் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

### இன்று வந்து சேரும்

# செஞ்சிலுவை பிரதிநிதிகள் வடமராட்சி செல்வர்

(வடமராட்சி கிழக்கு)

யாழ். குடாநாட்டின் நிலைமையை நேரில் கண்டறிவதற்காக இன்று வந்து சேரவிருக்கும் நோர்வே நாட்டின் செஞ்சிலுவைச்சங்கத்தின் பிரதிநிதிகள் வடமராட்சி கிழக்கிற்கு சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறியவுள்ளனர்.

மூன்று பேர் கொண்ட இக்குழு விமானம் மூலம் பலாலி வந்து, அங்கிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைவார்கள்.

பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து யாழ். செஞ்சிலுவைச் சங்கக்கிளையின் பிரதிநிதிகள் அவர்களை வரவேற்று வடமராட்சி, வடமராட்சி கிழக்கு பகுதிகளில் இராணுவ நடவடிக்கையினால் ஏற்பட்ட அனர்த்தங்களையும், மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களையும் காண்பிப்பார்கள்.

குழுவினர் யாழ். குடாநாட்டில் தங்கியிருக்கும் நாட்களில் யாழ். குடாநாட்டின் ஏனைய இடங்களில் இராணுவ நடவடிக்கையினால் ஏற்பட்ட அனர்த்தங்களையும் பொதுமக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களையும் பார்வையிடுவார்கள். (36)

## யாழ். குடா நாட்டில் வயிற்றோட்ட நோய்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வயிற்றோட்ட நோய் வேகமாகப் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்களும் குழந்தைகளுமே இந்நோயினால் பெரிதும் பீடிக்கப்பட்டு வருகின்றனர். அகதி முகாம்களில் இந்நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது.

இவ்வாரத்தில் தென்மராட்சிப் பகுதியில் வயிற்றோட்டத்தினால் இரு குழந்தைகள் பலியாகின யாழ். ஆஸ்பத்திரியிலும் பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது. பிந்திய தகவல்களின் பிரகாரம் மொத்தம் 22 குழந்தைகள் வயிற்றோட்ட நோய் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளாலியைச்சேர்ந்த இரண்டுமாதக் குழந்தைஒன்று இம்மாதம் 18 ஆம் திகதியும், இத்தாவிலில் இன்னொரு குழந்தை 20 ஆம் திகதியும் வயிற்றோட்டத்தினால் இறந்தன. (42)

### இராணுவ

யுள்ளது. அரசும் இராணுவத்துக்கு பொறுப்பாகவுள்ள இராணுவ அதிகாரிகளும் தீவிரமான தாக்குதல்களில் ஈடு

## வீரவணக்கம்



### சத்துருக் கொண்டான் பகுதியில்

# படையினர் துப்பாக்கிச் சூடு மீனவர் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

சத்துருக் கொண்டான் ஏரியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த படகொன்றின் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

மீன் வலையுடன் இவரது சடலம் கரைஒதுங்கி இருந்ததாகவும், நாவற்குடாவைச் சேர்ந்த மகேந்திரராஜா மகாதேவன் என்ற கடற்றொழில் தொழிலாளியே இவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### விடுதலைப்புலிகள்

அச்செய்தி கூறுகிறது.

கட்டளைகளை வழங்கும் தாய்க்கப்பல்கள் பாக்கு நீரிணையில் கடற்புலிகளின்கடற் பாதையில் நிறுத்திவைக்கப் பட்டுள்ளன என்றும்,

## பாராட்டு

1991 ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த. சாதாரணப்பரீட்சையில் அகில இலங்கையிலும் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற காரைநகர் கொத்தணி, கலாநிதி ஆ. தியாகராசா ம.ம. வித்தியாலயத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் பாராட்டைப் பெறுவதற்கு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். இம் மாணவர்களான செல்வி இ சுகந்தினி, செல்வி இ. நாகேஸ்வரி, செல்வன் அ. றமணன் ஆகியோருக்கு கொத்தணி அதிபர் செ தேவதாசன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

## சீருடைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளினால் இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து ஏனைய இடங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கே இலவச சீருடைகள் வழங்கப்படும் என யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வறிய மாணவர்களுக்கும் இச்சீருடைகள் வழங்கப்பட்டு வந்ததென்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# தெரிவுக்குழு கூட்டங்களுக்கு எம். பி.கள் செல்வதில்லை

# கப்பலில் செல்லவிருப்போர் ஞாயிறு சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் அதிவிசேட சிகிச்சைபெறுவதற்குச் செல்ல யாழ் போதனா வைத்தியசாலையில் பதிவு செய்த நோயாளர்களை எதிர்வரும் முதலாம்திகதி ஞாயிறுகாலை ஆறு மணிக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் சகல ஏற்பாடுகளுடனும் சமுகமளிக்கும்படி கேட்டுககொள்ளப்படுகின்றனர்.

கடந்த 12,13-ம் திகதிகளில் யாழ் போதனா வைத்தியசாலையில் பதிவுசெய்த 50 நோயாளர்கள் தவிர்ந்த அன்றைய தினம் பதிவுசெய்யாமல் வேறு ஒரு நாளில் பதிவுசெய்யும்படி திருப்பியனுப்பப்பட்டவர்களில் அரைவாசிப் பேர் பதிவுசெய்துவிட்டனர். எனினும் மிகுதிப்பேரின் பெயர்ப் பட்டியல்கள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என யாழ்வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இவர்கள் சிகிச்சை பெற கொழும்புசெல்வதாயின் நேரடியாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் தொடர்புகொள்ளும்படி யாழ் வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிக்கின்றார். (பா)

## வெளியூர்த் தபால்கள் 31ஆம் திகதி வரை சேர்க்கலாம்

(யாழ்ப்பாணம்)

வெளியூர்த்தபால்களை இம் மாதம் முப்பத்தோராம் திகதி வரை உப தபாலகங்களில் சேர்க்கலாம் என யாழ் பிரதான தபாலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதத் தொடக்கத்தில் பருத்தித்துறையில் இருந்து கொழும்பு செல்ல இருக்கும் ''குமாரி'' கப்பலிலேயே இத் தபால் பொதிகள் எடுத்துச்செல்லப்பட இருக்கின்றன.

கடந்த மாதம் 23ஆம் திகதியில் இருந்து இன்று வரையும் சேர்க்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் பருத்தித்துறையிலும் யாழ். பிரதான தபாலகத்திலும் வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்

## சான்றிதழ்களை பெற்றுக்கொள்க

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட உயர் தொழில் ஆங்கிலச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் சான்றிதழ்கள் யாழ். திறந்த பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

இப்பரீட்சைக்குத் தோன்றிய மாணவர்கள் தமது சான்றிதழ்களை வந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ். திறந்த பல்கலைக்கழக அதிபர் அறிவி

தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்களும் குழந்தைகளுமே இந்நோயினால் பெரிதும் பீடிக்கப்பட்டு வருகின்றனர். அகதி முகாம்களில் இந்நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது.

இவ்வாரத்தில் தென்மராட்சிப் பகுதியில் வயிற்றோட்டத்தினால் இரு குழந்தைகள் பலியாகின யாழ். ஆஸ்பத்திரியிலும் பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது. பிந்திய தகவல்களின் பிரகாரம்

---

இராணுவ

யுள்ளது. அரசும் இராணுவத்துக்கு பொறுப்பாகவுள்ள இராணுவ அதிகாரிகளும் தீவிரமான தாக்குதல்களில் ஈடுபடாவிட்டால் விளைவுகள் பயங்கரமானதாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

லெப்டினன் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மரணத்திற்குப் பின்னர், புலிகளின் நடவடிக்கைகளினால் பாதிப்புக்குள்ளாகிய பகுதியில் வாழும் மக்களின் நலன்கள் அனைத்துமே பாதிக்கப்பட்டுள்ளன.

கிழக்கில், குறிப்பாக கிராமங்களையும் குடியிருப்புகளையும் பாதுகாப்பதற்கென வைக்கப்பட்டிருந்த படையை வாபஸ் பெற்றதால் புலிகள் இப்பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வழி வகுத்துள்ளது. கிழக்கிலிருந்து படைகளை வாபஸ் பெறுவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை என்று பொலநறுவ விகாராதிபதி வண. கீத்தலகம சிறிஙெங்காரதேரோ தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் வாரத்தில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா ஹிங்குறுகொடவுக்கு வந்த சமயம் தான் பாதுகாப்பு நிலைமை பற்றி அவரிடம் கூறியதாகத் தேரோ தெரிவித்தார்.

காடுகளிலும், எல்லைப் புறங்களிலும் இருந்து படைகளை மீள அழைத்து மாகாணத் தலைநகரங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்படுவதாக தேரோ கருதுகிறார்

புலிகளுக்கெதிரான அரசின் மிகவும் தீவிரமான இராணுவ நடவடிக்கை இப்போது சிக்கலுக்குள் அகப்பட்டுள்ளது. நம்பிக்கையற்ற திட்டங்கள், புலிகளின் இராணுவத் தந்திரம் பற்றிய தவறான கணிப்பு ஆகியன பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர் என்றும் பத்தி எழுத்தாளர் சமித்திரா பேர்ணான்டோ எழுதியுள்ளார்.

இரண்டுமாதக் குழந்தையொன்று இம்மாதம் 18 ஆம் திகதியும், இத்தாவிலில் இன்னொரு குழந்தை 20 ஆம் திகதியும் வயிற்றோட்டத்தினால் இறந்தன. (42)

## வீரவணக்கம்



### 2-ம் லெப். யோகவதி

25-10-92 அன்று காலை சுகவீனம் காரணமாக 2-ம் லெப்டினன்ட் யோகவதி (ஜெயராஜா யூடிற்ரஜனி, கரவெட்டி மேற்கு கரவெட்டி) சாவடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

## வீரச்சாவு



### லெப். அன்பு

23-10-92 அன்று இரவு ஒட்டகப்புலம் பகுதியில்சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் லெப்டினன்ட் அன்பு (சயந்தன்-வினாசித்தம்பி செல்வரூபன், கோப்பாய் தெற்குகோப்பாய்) வீரச்சாவு அடைந்தார் இவருக்கு தமிழீழ விடுதைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

முகத்தை வந்தடைவார்கள்.

பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து யாழ். செஞ்சிலு

பொது மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களையும் பார்வையிடுவார்கள். ( 36 )

சத்துருக் கொண்டான் பகுதியில்

## படையினர் துப்பாக்கிச் சூடு மீனவர் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

சத்துருக் கொண்டான் ஏரியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த படகொன்றின் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

மீன் வலையுடன் இவரது சடலம் கரைஒதுங்கி இருந்ததாகவும், நாவற்குடாவைச் சேர்ந்த மகேந்திரராஜா மகாதேவன் என்ற கடற்றொழில் தொழிலாளியே இவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

விடுதலைப்புலிகள்

அச்செய்தி கூறுகிறது.

கட்டளைகளை வழங்கும் தாய்க்கப்பல்கள் பாக்கு நீரிணையில் கடற்புலிகளின்கடற் பாதையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன என்றும்,

பயணிகள் படகொன்றின் வடிவமைப்பை மாற்றியமைத்து இந்த நீர்மூழ்கிக்கப்பலை அமைத்துள்ளனர். ஓட்டி அமரும் இடத்தைத் தவிர மற்றப் பகுதிகளில் வெடிமருந்து நிரப்பப்பட்டிருக்கும் என்றும் ஐலண்ட் பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவிக்கிறது.

---

அகதிகள்

வாராந்தம் உலர் உணவு வகைகளை வழங்கி வருகிறது. அத்துடன் இம் மக்களது கல்வி மருத்துவம், சுகாதாரம் மற்றும் இருப்பிடம் ஆகிய அடிப்படை வசதிகள் குறைவாக உள்ள நிலைமையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலைமைகள் குறித்த சகல விபரங்களும் அடங்கிய அறிக்கை கொழும்பில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலயத்தினூடாக ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலகத்துக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையில் உள்ள விபரங்கள் குறித்து தற்பொழுது ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலகம் ஆராய்ந்து வருகிறது. இதன் பின்னர் இலங்கையில் உள்ள அகதிகள் குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த தீர்மானம் எடுக்கப்படும் என்று கூறப்படுகிறது. (க)

---

3 வேங்கைகள்

டினன் நிறோஜ் (உதயகுமார் ரஞ்சித் - வந்தாறுமூலை, மட்டக்களப்பு), லெப்டினன்ட் சசிகுமார் (பிலிப்டயஸ் தியோரிஸ்டயஸ் - தாழ்வுபாடு, மன்னார்), லெப்டினன் இறையனார் (பேதுரு செபமாலை - வஞ்சியன்குளம், வங்காலை) ஆகிய போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

துள்ளார்.

## சீருடைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளினால் இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து ஏனைய இடங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கே இலவச சீருடைகள் வழங்கப்படும் என யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வறிய மாணவர்களுக்கும் இச் சீருடைகள் வழங்கப்பட்டு வந்ததென்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## தெரிவுக்குழு கூட்டங்களுக்கு எம். பி.கள் செல்வதில்லை

[கொழும்பு]

46 பேர்கொண்ட பாராளுமன்றத்தெரிவுக்குழுக் கூட்டங்கள் கூட்டப்படும்போது கோரத்திற்குத் தேவையான 14 உறுப்பினர்கள் கூட அநேக வேளைகளில் சமுகமளிப்பதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினை தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெற்றுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுக்குழுவின் கூட்டங்களுக்கு செல்வதில்லையென்று நம்பகரமாகத் தெரியவருகிறது.

---

ராணுவத்தின்

ளது. இதன் இன்னொரு வெளிப்பாடாகமணலாறுப்பிரதேசம் மீண்டும் படையெடுப்புக்கு இலக்காகலாம். இதன் மூலம் தமிழர் தாயகத்தைத் துண்டாடலாம் எனவும் போராட்ட வீரியத்தைகுறைக்கலாம் எனவும் அரசு எண்ணுகிறது. இதன் பொருட்டு முன்னரும் இராணுவ நடவடிக்கைகள் இப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டன. இப் படையெடுப்புகள் முன்னர்ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா கூட்டுப் படைத் தலைமைப் பொறுப்பில் இருந்த சமயமே மேற்கொள்ளப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்

---

மனம்தளர்வுற்ற

ஆனால் எப்போதும் பாதுகாப்பு அரண்களில் இராணுவம் நிலை கொண்டிருப்பதில்லை. தாக்குதல் பலமாக இருந்தால் பாதுகாப்பு நிலைகளிலிருந்து பின் வாங்குமாறு தளத்திலுள்ளஅதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது இராணுவ பாதுகாப்பு அரண்களைச் சுற்றிக் கண்ணிவெடி விதைக்க அரசிடம் பணம்பற்றாக் குறையாக இருப்பதே இதற்கான காரணமாகும் என்றும் தெரிவித்துள்ளார்

---

வடமராட்சி

அதிகரித்துக் காணப்பட்டது.

அதேவேளை, நேற்று முன்தினம் இரவு 'சுப்பர் சொனிக்' விமானமும் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு மேலாய் பறந்து சென்றது. (36)

---

### பொதுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக அனைத்து கலைப்பீட மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கூட்டத்தில் சில முக்கியமான விடயங்கள் குறித்து சிரேஷ்ட மாணவர்களால் ஆராயப்படுமெனவும் இதில் சகல கலைப்பீட மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி கோரப்பட்டுள்ளனர்.

---

முப்பது

வும் விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடு தெரிவிக்கின்றது.

மேலும், 1 - 10 - 1992 அன்று கட்டைக்காட்டில் நடாத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதலில் மினி முகாம் ஒன்று தகர்க்கப்பட்டது, 3 கி மீ. நீளமான இராணுவ வேலி சிதைக்கப்பட்டது. மினி முகாமில் இருந்த ஆயுதக் கிடங்கில் இருந்து 200 க்கும் மேற்பட்ட ஆயுதங்களும், மூன்று இலட்சம் ரவைகள், படைத்தளபாடங்கள் உட்பட இரண்டு வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வகையில், இது முக்கிய வரலாற்று நிகழ்வாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வெளியூர்த் தபால்கள் 31ஆம் திகதி வரை சேர்க்கலாம்

(யாழ்ப்பாணம்)

வெளியூர்த்தபால்களை இம் மாதம் முப்பத்தோராம் திகதி வரை உப தபாலகங்களில் சேர்க்கலாம் என யாழ் பிரதான தபாலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதத் தொடக்கத்தில் பருத்தித்துறையில் இருந்து கொழும்பு செல்ல இருக்கும் ''குமாரி'' கப்பலிலேயே இத் தபால் பொதிகள் எடுத்துச்செல்லப்பட இருக்கின்றன.

கடந்த மாதம் 23ஆம் திகதியில் இருந்து இன்று வரையும் சேர்க்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் பருத்தித்துறையிலும் யாழ். பிரதான தபாலகத்திலும் வைக்கப்பபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

பெற கொழும்பு செல்வதாயின் நேரடியாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் தொடர்புகொள்ளும்படி யாழ் வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிக்கின்றார். (பா)

---

### சான்றிதழ்களை பெற்றுக்கொள்க

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்பட்ட உயர் தொழில் ஆங்கிலச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் சான்றிதழ்கள் யாழ். திறந்த பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

இப்பரீட்சைக்குத் தோன்றிய மாணவர்கள் தமது சான்றிதழ்களை வந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ். திறந்த பல்கலைக்கழக அதிபர் அறிவித்துள்ளார். (4

---

## மரண அறிவித்தல்

## கந்தையா சச்சிதானந்தம்

கந்தையா சச்சிதானந்தம் (முன்னாள் உரிமையாளர் சிறி முருகன் அரிவு ஆலை, கைதடி) கொழும்பில் காலமானார். இவர் கந்தையா அம்மாகுட்டி தம்பதிகளின் புதல்வரும், தருமலிங்கம் பொன்னம்மா தம்பதிகளின் மருமகனுமாவார். இவர் சந்திரமதியின் அன்புக்கணவரும், சிவகுமார் (பிரான்ஸ்), சசிலா, சசிகுமார், சுசிலா, சசிகலா, சசிறேகா ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவஞானம்(பிரான்ஸ்), திருச்செல்வம் (ஜேர்மனி), வசந்தா (நீர்வேலி), ராசாம்பாள் (பிரான்ஸ்), ராசாத்தியம்மா, கௌரி ஜேர்மனி, அருமைநாயகம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற மகான், இரததினம், சாந்தசரோஜினி, கனகமமா, ராசாப்பு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 27-10-92(இன்று) முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக தச்சன்தோப்பு வேலம்பிராய்க்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்

வி. சந்திரகுமார்

தச்சன்தோப்பு,
ஸ்ரேசன் றோட்,
கைதடி.

(3532)

---

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள் 26. 10. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6309

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:-
26-1084, 41-5412, 24-0521, 28-1794, 41-9759, 42-2595, 25-5950, 71-4984, 42-1325, 26-1349, 26-9495, 41-9487, 42-9312, 26-535, 24-4747, 36-1140.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-
24-1685, 41-8557, 28-1992, 21-4070, 40-919, 27-2004, 27-6583, 28-6546, 24-6699, 42-1320, 26-6026, 24-5036, 24-5437, 26-525, 28-2342, 26-3130.